


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 8, இதழ் - 6, நவம்பர் - டிசம்பர் 2022




**R5307**

## JEALOUSY AND ENVY PUNISHED
## பொறாமையும் பகையும் தண்டிக்கப்படும்

எண்ணாகமம் : 12

“அன்புக்கு பொறாமையில்லை, அன்பு தன்னை புகழாது,
இறுமாப்பாய் இராது, அயோக்கியமானதை செய்யாது. ”- (1கொரிந்தியர் 13:4,5)

பரிசுத்த பவுல், சாத்தான் மற்றும் மாம்சத்தின் கிரியைகளின் தனது கணக்கீடுகளில் பகை, பொறாமையோடு கூட கோபம், வன்மம், பகைகள் மற்றும் சண்டைகளையும் சேர்க்கிறார். பிசாசின் இந்த கிரியைகள் சாத்தானின் குணட்சணங்கள். வேதாகம பதிவின்படி சாத்தானின் இலட்சியம் சர்வ வல்லவரை பகைக்க வழி நடத்தி, முடிவாக, யேகோவாவின் பரலோக ராஜ்யத்திற்கு போட்டி அரசாட்சியை, மனிதர்களை தனக்கு கீழாகக் கொண்டு பூமியில் ஸ்தாபிக்க முயற்சித்தான். அவனது இலட்சியம், சுயநலம் மற்றும் பொறாமைக்கு வழி நடத்தியதோடு, நமது முதல் பெற்றோர்களை வஞ்சிக்கும்படியாக தெய்வீக குணலட்சணத்தை தவறாக சித்தரிக்க வழி நடத்தியது.

மாம்சத்தின் கிரியைகள் கெட்ட பண்புகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நமது இனம் சாத்தானால் நஞ்சூட்டப்பட்டு தெய்வீக தண்டனையின் கீழாக வந்திருந்தது. சாத்தான் தீய விருப்பங்கள், தீய கிரியைகளின் ஒவ்வொரு வகையையும் ஊக்க மூட்டினான். மென்மேலும் நமது இனம் இந்த பாதகமான செல்வாக்குகளின் கீழாக வந்திருக்கின்றன. அவை பலவீனமுள்ளதாகவும், சாகக்கூடியதாகவும் சமநிலையற்றதாகவும் ஆகியிருக்கின்றன.

தெய்வீக அங்கீகாரம் பெற்றிருக்கிற நம்மில் கிரியை செய்கிற தேவ சாயலுக்கு அதிகமதிகமாக கொண்டு செல்லுகிற தெய்வீக குணலட்சணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், சாத்தானின் குணலட்சணங்களை களைந்து போட வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் தூண்டுகிறார். இவைகள் சாந்தம், தயவு, சமாதானம், நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகியவை. பரலோக மகிமையின் உயர்ந்த தளத்தில் தேவனுடைய பரிசுத்த ஜனங்களாக முடிவாக ஆகக்கூடியவர்கள், இந்த குணங்கள் நன்கு அபிவிருத்தி அடைந்தவர்களாகவும் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்று நாம் உறுதியளிக்கப்படுகிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு “நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் பரிபூரணமாக அளிக்கப்படும்” என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். (2 பேதுரு 1:11)

அந்த ராஜ்யம் இரட்சிக்கப்பட்ட மனுக்குலம் முழுவதையும் குறிக்காது. ஆனால் பூமியின் சகல வம்சங்களுக்கும் இரட்சிப்பை ஏற்படுத்தப்போகிற தெய்வீக நிறுவனமாக இருக்கும். எனினும் இப்படிப்பட்ட இரட்சிப்பு மட்டுமே இப்பொழுது திறந்திருக்கிறது. பரிந்துரைக்கப்பட்ட இந்த மார்க்கத்தை பின்பற்றுவதினாலும், இந்த பல்வேறு குணலட்சணங்களை வளர்ப்பதினால் மட்டுமே, யாரும் இதற்கு தகுதியாக முடியும் அல்லது நித்திய ராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இப்படியாக ராஜ்யத்தின் சகல அங்கங்களும், பரிசுத்த பவுல் அறிவிப்பது போல நமது இரட்சகராகிய தேவனுடைய பிரியமுள்ள குமாரனின் சாயலுக்கு ஒப்பாக வேண்டும். மாம்சத்தில் அல்ல, நமது நோக்கத்திலும் இருதயத்திலும் சாயலாக வேண்டும். இது மாம்சத்தில் கிட்டத்தட்ட பூரணத்தையும், முடிந்தவரை தெய்வீக தேவைகளுக்கு இணக்கமாகவும் இருக்கக்கூடிய நிலைமையை அர்த்தப்படுத்துகிறது.

நித்திய ஜீவனையும் தெய்வீக கிருபையையும், பூமிக்குரிய தளத்தில் மானிட சரீரத்தில் அடையப் போகிறவர்கள், பாவம் மற்றும் சாத்தானின் ஆவிக்குரியதாக தோன்றுகிற அனைத்தையும் நீக்கிப் போட வேண்டும் என்று உண்மையிலேயே வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. அதாவது ஆதாம் பாவம் பண்ணுவதற்கு முன்பு ஆதாமில் காட்டப்பட்ட ஆதி தேவ சாயலையும் தேவரூபத்தையும் அவர்கள் மறுபடியும் இப்படியாக பெற வேண்டும்.

### மிரியாமின் பொறாமையும் பகையும்

இன்றைய வேதாகம பாடம் மோசேக்கு மூத்தவர்களாகிய அவரது மூத்த சகோதரன் ஆரோன் மற்றும் மூத்த சகோதரி மிரியாமின் தீவிரமான தவறைப் பற்றி நமக்கு கூறுகிறது. இருவரும் இந்த பாவத்தில் பங்கு பெற்ற போது மிரியாமின் பங்கு அதிகம் என்பதை தீர்மானிக்கலாம். இந்த கருத்து இந்த பாடத்தின் முடிவின் படி முழுவதுமாக நியாயமாக இருக்கிறது. தேவனுடைய தண்டனை மிரியாம் மேல் இருந்தது. ஆரோன் மேல் இல்லையென்று இது காண்பிக்கிறது.

இந்த காரியம் குடும்ப கவுரவத்தினால் ஆரம்பித்தது. மோசே எத்தியோப்பிய ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தார். இது அவர் மீதியான் தேசத்தில் விவாகம் பண்ணியிருந்த முதல் மனைவியா என்பதை நாம் அறியோம். இஸ்ரயேலர்கள் கானானுக்கு போகும்படியான பிரயாணத்தில் அவள் இப்பொழுதுதான் சேர்ந்திருந்தாள். சிலர் மோசேயின் முதல் மனைவி இறந்துவிட்டாள் என்றும் சிப்போராள் அவரது இரண்டாவது மனைவி என்றும் கருதுகிறார்கள். இவள் எந்த மனைவி என்பது முக்கியமல்ல. அவள் இஸ்ரயேலரின் கூடாரத்தில் மோசேயுடன் வாழ வந்திருந்தாள் என்பது உண்மை. இப்படியாக அவள் மகா பெரிய தலைவர் மோசேயின் மனைவியாக நாட்டின் முதல் பெண்மணியாக ஆனாள்

இதற்கு முன்னதாக மிரியாம், தேசத்தின் முதல் பெண்மணியாக இருந்தாள். அவள் தனது நிலைமையை இழந்ததையும் அவளது செல்வாக்கும் சென்றதையும்

அவள் உணர்ந்தது இயற்கையானதே. அது புறஜாதியிலிருந்து வந்த தனது தம்பி மனைவியானவள்மேல் பிரதிபலித்தது. இந்த உண்மை மிரியாமுக்கு மதத்தின் பேரால் பொறாமையை ஏற்படுத்தியது. அது தனது தம்பி மனைவியின் பேரில் உள்ள பொறாமையினால் அல்ல என்று தனக்குத்தானே காரணம் கற்பித்துக்கொண்டு தனக்குத் தானே நம்ப வைத்துக்கொண்டாள். அது உயர்ந்த நீதிமுறைமையின் மேல், தேவனுடைய கனத்தின்மேல், இஸ்ரயேல் தேசத்தின் கனத்தின்மேல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் எதிர்கால சந்ததியின் மேல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைத்தாள்.

மோசே குழந்தையாக இருந்த போது, ஒரு கூடையில் புதரில் நைல் நதியில் வைக்கப்பட்ட போது, பார்வோனின் மகள் குளிக்க வரும்போது கவனித்துக்கொண்டிருந்த, சிறு பெண்ணாயிருந்த அதே மிரியாம்தான் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். குழந்தை மோசேக்கு வளர்ப்புத் தாயாக இருக்கும்படி தனது தாயையே அழைத்துக் கொண்டு வந்த அதே மிரியாம் தான். இதே மிரியாம் ஆரோனுடன் சேர்ந்து கர்த்தரின் வழி நடத்துதலின்கீழ் இஸ்ரயேலின் காரியங்கள் அனைத்திலும் மோசேயின் முழு நம்பிக்கையை அனுபவித்தாள். இதே மிரியாம் தான் கர்த்தரால் தீர்க்கதரிசியானவளாக அங்கீகரிக்கப் -பட்டிருந்தாள். இஸ்ரயேலர்கள் செங்கடலை கடந்த பிறகு, எகிப்திய ராணுவம் அழிக்கப்பட்ட பிறகு இஸ்ரயேலிய ஸ்தீரிகளை தன் தம்புரோடு வெற்றிப் பாடலில் வழி நடத்தியவள் இந்த மிரியாம்தான்.

இப்படியாக மிரியாமின் பொறாமைக்கு மன்னிப்பு கேட்பது நியாயமானதாக காணப்படலாம். நல்லதோ, கெட்டதோ, எந்த பொறாமையையும் உண்மையிலேயே கற்பனை செய்யக்கூடாது. அதற்காக மன்னிப்பும் காணப்படாது. நல்ல மனிதர்கள் பொறாமை, பகை முதலானவைகளுக்கு இடங்கொடுக்க மாட்டார்கள். விநோதமான சூழ்நிலையில் அவர்களை நியாயப்படுத்த நினைத்து ஏதோ ஒரு வகையில் தங்களை ஈடுபடுத்துகின்றனர்.

தனது சகோதரன் தனது மார்க்கத்தில் அறிவீனமாக இருக்கிறான் என்று சிறிதளவு நினைத்து மிரியாம், தன்னுடன் ஏற்பட்ட பிரிவினையினிமித்தம் மோசேயை தேவன் தம்முடைய ஊழியத்தில் ஈடுபடுத்த நினைக்க மாட்டார் என்று அதிகமதிகமாக தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள். அவளது கேடுண்டான மனது, மோசேயை தேவன் கை விட்டுவிட்டார், இல்லையென்றால், அவள் பெரிய தவறு என்று நினைத்துக் கொண்டிருக்கிற காரியத்தில் விழுந்திருக்க மாட்டார் என்பதற்கான ரூபகாரங்களை காண ஆரம்பித்தது. தன்னுடைய பயத்தை ஆரோனிடம் அவள் கூறினாள். இருவரும் இஸ்ரயேலின் தலைவன் விழுந்துபோன வருத்தத்தைக் குறித்து சிந்தித்து, ஜெபித்து, மோசேயின் விலகலினால் பொறுப்பு அவர்கள் மேல் விழுந்ததையும் உணர்ந்தார்கள்.

ஆரோன் வெளிப்படையாக பலவீன குணலட்சண -முடையவனாயிருந்து, மோசேக்கு வாயாகவும் உதவியாகவும் மட்டுமே இருந்தார். மோசே இல்லாத சமயத்தில், அவர் மலையில் இருந்த போது, பொறுப்பு ஆரோனிடம் இருந்த போது, இஸ்ரயேல் ஜனங்களின் தூண்டுதலின் பேரில் பொன் கன்றுக்குட்டியை, விக்கிர ஆராதனையை ஏற்படுத்தினது போல, இந்த முறையும் தனது பலவீனத்தை காண்பித்தார். மிரியாமும் கூட, கலக ஆவியுடைய ஜனங்களை திருப்திப்படுத்த அந்த சமயத்தில் ஒப்புதல் அளித்தாள்.

மிரியாம் தனது தேச துரோக யோசனைகளை ஆரோனும் இதே எண்ணத்தை கொண்டிருக்கிறார் என்று இஸ்ரயேலின் பாளையம் முழுவதும் பரப்பினாள் என்று இந்த மூலவாக்கியம் குறிப்பிடுகிறது. மோசே மட்டுமே தேசத்திற்கு தலைவரல்ல, மோசேயைப் போல மிரியாமும் ஆரோனும் கூட தலைவர்கள் தான் என்பதை ஏற்றுக்கொள்ளுவதற்கு ஜனங்களை தயார்படுத்தி, கர்த்தருக்கும் உதவி பண்ண வேண்டும் என்று எண்ணங்கொண்டார்கள். நயவஞ்சகமாக ஜனங்களை தயார்படுத்துவது, தேவன் மோசேயை முழுவதுமாக தள்ளிவிட்டு, ஆரோனை வாயாகக் கொண்டு மிரியாமிடமே முழுவதுமாக பேசக்கூடிய நேரத்தை கொண்டு வரும் என்று நினைத்தாள்.

## கர்த்தர் அதை கேட்டார்

கர்த்தர் தமது வேலையில் கவனக்குறைவாக இல்லை என்பதை கர்த்தருடைய பிள்ளைகளும் மற்றவர்களும் அடிக்கடி மறக்கின்றனர். அவரது விருப்பத்தின் நிமித்தம், அவர் தமது சொந்த சித்தத்தின் ஆலோசனைப்படி சகல காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார். வேத மாணவர்களாக நாம் இந்த மாபெரும் உண்மையை அதிகமதிகமாக உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் கர்த்தருடைய வேலையில் செழிப்பானது வல்லமையினாலோ அல்லது மனித சக்தியினாலோ அல்லது தந்திரத்தினாலோ வராது. ஆனால் கர்த்தருடைய ஆவி, கர்த்தரின் வல்லமை, கர்த்தரின் சித்தத்திற்கு இசைவாகவும் அதன் மூலமாகவும் வரும் என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

இந்த சதியை முளையிலேயே கிள்ளி எறிய கர்த்தர் உடனே மோசே, ஆரோன் மற்றும் மிரியாமை ஆசாரிப்புக் கூடாரத்துக்கு முன்னே தன்னுடைய பிரசன்னத்திற்குள் வரும்படி அழைத்தார். மூவரும் உடனே அழைப்பாணைக்கு கீழ்ப்படிந்து வந்தார்கள். கர்த்தர் மோசேயை நீக்கி விட்டு தன்னை தலைமையாக நியமிக்கக் கூடிய நேரம் வந்தது என்று மிரியாம் நினைத்தாள். ஆனால் இறுதி முடிவு மிகவும் வேறாக இருந்தது. ஆரோனும் மிரியாமும் சில காலம் உண்மையிலேயே தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள் என்றும், அவர்களை பயன்படுத்துவதில் சந்தோஷப்பட்டார் என்றும் தேவன் கூறினார்; ஆனால் மோசேயுடன் அவர் வைத்திருந்த தொடர்பு மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது என்றும் அறிவித்தார். அவர் மோசேயுடன் கனவு மூலமாகவோ, காட்சி மூலமாகவோ பேசாமல் நேரடியாக பிரதியட்சமாக பேசினதாக கூறினார். இப்படியாக பொறாமை, பகை மற்றும் சதித்திட்டம் மற்றும் தீங்கு பேசுதல் யாவற்றையும் தேவன் ஒதுக்கி வைத்தார்.

எனினும் கூடுதலாக தேவன் ஒரு தண்டனையை கொடுத்தார். மேக ஸ்தம்பத்தில் தெய்வீக பிரசன்னம் அவர்களை விட்டு நீங்கியது. தங்கள் சகோதரி மிரியாம் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டதை மோசேயும் ஆரோனும் கண்டார்கள். இதெல்லாம் தான் பாவ வழியில் மிரியாமுக்கு உதவியதை இது உணர்த்தியது என்பதை ஆரோன் உணர்ந்து கொண்டான். தனது சகோதரன் மோசே தான் உண்மையிலேயே ஜனங்களுடைய தலைவன் என்பதை உணர்ந்து கொண்டான். ஆரோன் மோசேயை நோக்கி: "ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய் செய்த இந்த பாவத்தை சுமத்தாதிரும். அவள் செத்து விழுந்த பிள்ளையைப் போல ஆகாதிருப்பாளாக என்றான்."

பிறகு மோசே கர்த்தரை நோக்கி, "என் தேவனே, அவளை குணமாக்கும்" என்று கெஞ்சினான். தேவன் மோசேயின் வேண்டுதலைக் கேட்டு, அவளை சொஸ்தப்படுத்தினார். ஆனால் மற்றவர்களுக்கு குஷ்டரோகம் வந்து, சுகமாகும் போது செய்ய வேண்டிய

முறைமைகளின்படி இவளும் செய்ய வேண்டும் என்று கூறினார். அப்படிப்பட்டவர்கள் அனைவரும் ஏழு நாட்கள் பாளையத்துக்கு புறம்பே விலக்கபட்டு இருந்து, மேலும் அந்த வியாதி வராதிருக்கிறதா என்று சோதிக்கப்பட்டு பின்பு சேர்த்து கொள்ளப்பட வேண்டும்.

### "நியாயப்பிரமாணம் ஒரு நிழலாக இருந்தது"

இஸ்ரயேலருக்கு நியாயப்பிரமாணத்தின் மூலம் சொல்லப்பட்ட பல்வேறு காரியங்கள் மேலானவைகளை விளக்குகிற தீர்க்கதரிசன நிழல்கள் என்று அப்போஸ்தலர் நமக்கு விளக்குகிறார். அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு மேலானவைகளை விளக்குகிறது என்று கூறுகிறார். உதாரணத்திற்கு, குஷ்டரோகம் தெய்வீக குறுக்கீடு இல்லாமல் சொஸ்தப்படுத்த முடியாத வியாதி. அது பாவத்திற்கு நிழலாக இருந்தது. ஏழு நாட்கள் ஜனங்களிலிருந்து விலக்கி வைக்கப்படுவது, பாவத்தை நீக்கிப் போடுவதற்காக சோதனைக்கான சுத்தப்படுத்துவதற்கான, பிறகு தேவனுடன் இணக்கத்திற்கு வருவதற்கான ஒரு காலமாக இருந்தது.

இன்றைய பாடத்திலிருந்து அநேக காரியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். இதில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று, சுயநலத்துக்கு அடிப்படையானது பொறாமை மற்றும் பகை என்பதாகும். அது சகல பாவங்களிலும் வஞ்சகமானது, மற்றவர்கள் என்ன நினைத்தாலும் இது தேவனுடைய பார்வையில் மிகவும் தீவிரமானது.

பரிசுத்த பவுலின் சபைக்கான அறிவுரையில் இந்த வசனம் நமக்கு கொடுக்கப்படுகிறது. சபையானது சுவிசேஷ செய்தி மூலம் மனுக்குலத்திலிருந்து பொதுவாக அழைக்கப்பட்டு, இயேசுவின் சீஷர்களாகவும் அவருடைய உடன் சுதந்தரருமாயிருக்கும்படியான ஒரு விசேஷித்த வகுப்பார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவர்களது அழைப்பு பூமிக்குரிய சகல உரிமைகளையும் இயேசுவுடன் கூட பலியிடவும், தெய்வீக சித்தத்தின் ஏற்பாடுகள் அனைத்திற்கும் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுப்பதற்குமாகும். அவர்களது உடன்படிக்கையானது அவர்களது இரட்சகராகிய தலைமைக்கு முற்றிலும் கிறிஸ்துவைப் போல தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள் அனைத்திற்கும் உண்மையுள்ளவர்களாயிருத்தல் ஆகும்.

இது, பிசாசு அல்லது மாம்சீக கிரியைகளுக்கு இடம் கொடுக்காது. இவைகளனைத்தும் தேவனுக்கு பிரியமில்லாதிருப்பதால் நீக்கப்பட வேண்டும், நிராகரிக்கப்பட வேண்டும். மாறாக, பரிசுத்த ஆவியின் கனிகளும் கிருபைகளும் மாற்றாக வைக்கப்பட வேண்டும். இப்படியாக இயேசுவின் சீஷர்கள் அவரைப் போல் முடிவாக தெய்வீக கிருபையின் நிறைவை கனம், மகிமை மற்றும் சாகாமையை, அவரது வலது பாரிசத்தின் சக்தியை அடைய வேண்டும்.

ஆகையால் சகல ஜனங்களும் இருளின் கிரியைகளை எறிந்துவிட முயற்சிக்கவும், ஜீவாதிபதியின் வழி நடத்துதலின் கீழ் தெய்வீக ஏற்பாடுகளுக்கு தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டியிருக்கும் போது, தேவனிடம் விசேஷமாக அர்ப்பணம் செய்த சபையானது, அவர்களது சகல நம்பிக்கைகளாகிய கனம், மகிமை மற்றும் சாகாமை, தப்பிதங்களை எதிர்ப்பதிலும், நல்ல குணலட்சணங்களை அபிவிருத்தி செய்வதிலும் இணைந்திருக்கின்றன. "அன்புக்கு பொறாமையில்லை; அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது; அயோக்கியமானதை செய்யாது" என்பதை நாம் நினைவு கூர வேண்டும். ஆகையால் அன்பானது பொன்னான கற்பனையின் முழு திட்ட அளவையும் தேவனுடைய முழு குணலட்சணத்தையும் குறிக்கிறது; ஏனெனில், "தேவன் அன்பாக இருக்கிறார்." (1யோவான் 4:8)

மிரியாமுக்கு கொடுக்கப்பட்ட உடனடியான தண்டனையும் அதன் விளைவும், பாவத்துடனான இப்படிப்பட்ட கையாளுதல் மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் வழக்கமான ஒழுங்குமுறையாக இருந்து, அதற்கு பலனை உடனடியாக கொண்டு வரும் என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. பாவம் செய்கிறவர்கள் துன்பப்படுவார்கள் என்பதை சகல மனிதரும் ஓரளவுக்கு உணருகிறார்கள். ஆனால் பாவத்தினிமித்தம் வரும் தண்டனைகளும் அல்லது துன்பங்களும் அதை அனுபவிப்பவர்களால் உணரப்படவில்லை. ஆகையால் அநேகர் அதன் மூலம் பாடத்தை கற்றுக்கொள்ளு -வதில்லை.

மேலும் இருண்ட காலத்தின் தப்பறையான போதனைகள் நம்மில் அநேகரை, பாவத்திற்கான தண்டனை நித்திய ஆக்கினை என்று தவறாக சித்தரிக்கிறது. இப்படியாக தேவனுடைய ஏற்பாடுகளை நாம் நேரடியாக மறுத்து, பாவத்திற்கான தற்கால தண்டனையும் சம்பளமுமாகிய காரியங்களிலிருந்து நமது கவனத்தை சிதறப் பண்ணுகிறது. மேலும் எதிர்கால தண்டனையை யாரும் நம்பாததாக, நம்பக்கூடாததாக அபத்தமாக சரியற்றதாக ஆக்குகிறது. மரிக்கும் தருவாயில் பாவ மன்னிப்புக்கான ஜெபம் அவர்களை தண்டனையி -லிருந்து முற்றிலுமாக தப்பித்துக் கொள்ளும் படியாக அனுமதிக்கிறது என்று நினைக்கிறார்கள். தெய்வீக ஏற்பாடுகளில் நாம் எந்த முன்னேற்றத்தையும் செய்ய முடியாது. "மனிதன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான்." தற்கால வாழ்க்கையிலும் சரி, வரவிருக்கிற வாழ்க்கையிலும் சரி. ஆனால் எந்த பேய்த்தனமும் நித்திய ஆக்கினையும் இருக்காது.

R5309

## MERCY AND TRUTH COMPONENT ELEMENTS OF CHRISTIAN CHARACTER

# கிருபையும், சத்தியமும் கிறிஸ்தவ குணலட்சணத்தின் மூலக்கூறுகள்

"கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்." "நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?"– (நீதிமொழிகள் 3:3; மீகா 6:8)

கிருபையும் சத்தியமும் நீதியின் மாபெரும் கொள்கைகள். சத்தியமும் நீதியும் எந்த பொருளுடையவைகள் என்று நாம் கூறலாம். சரியாக இருப்பது உண்மையாயிருக்கிறது. உண்மையாக இருப்பது அதாவது நிலையாக, உண்மையுள்ளதாக, உறுதியானதாக, நேர்மையானதாக இருப்பது வழக்கமாக சரியாக இருக்கிறது. நாம் நீதியை கழுத்திலே பூண்டு கொள்ள வேண்டும் என்று பதிவு கூறவில்லை. நீதி என்பது ஒரு குணம். நமது மனதிலும் இருதயத்திலும் தெய்வீக கொள்கையாக வைத்துக்கொள்வதைத் தவிர அதை மிக அதிகமாக உயர்த்த நாம் அனுமதிக்கப்படவில்லை. நீதிமான் இல்லை, ஒருவனாகிலும் இல்லை, யாரும் பூரணரில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நீதி விஷயத்தில் பரலோக பிதாவுக்கு சமமாக நாம் இருக்க முடியாது.

## கிருபைக்கும் சத்தியத்துக்கும் பிரதானமான இடத்தைக் கொடுங்கள்

நாம் பிதாவானவருக்கு ஏற்புடையவர்களாக இருப்போமானால், அது நீதியினால் மட்டுமே ஆகும். நீதி நம்மிடம் இல்லையென்றால், அது கிறிஸ்துவிடமிருந்து பெறப்பட வேண்டும். ஏனெனில் பூரணமில்லாத எதையும் தேவன் ஏற்றுக்கொள்ளுவதில்லை. நமக்குள் அபூரணம் இருந்தாலும் நமது சொந்த நடத்தையில் நம்மால் முடிந்தவரை நீதியின் திட்ட நிலைக்கு வரவேண்டும். ஆனால் மனுக்குலத்திலிருந்து சரியான முழு நீதிக்கு நம்மால் வர முடியாது. அவர்களுக்கு நன்மை செய்ய யாருமே இல்லாததால், நாம் அவர்களுடன் தயையுள்ளவர்களாக இருக்க வேண்டியது நமது கடமை. இப்படியாக இரக்கமாக இருக்கக்கூடிய தேவனுடைய குணலட்சணத்தை அடைய பிரயத்தனம் செய்ய வேண்டும். நீதி மற்றும் கிருபை ஆகிய இரு குணங்களையும் தமது செயல் தொடர்புகளில் அவர் தனித்தனியாக வைத்திருக்கும் போது, நாம் அதுபோல செய்ய முடியாது.

ஒருவர் சத்தியம் மற்றும் நீதியை தனது மனதிற்கு முன்னே வைப்பதற்கு, அவர் நேர்மையானவராக இருக்க வேண்டும். அவர்களில் நற்குணம், சத்தியம், பரிசுத்தம் என்பவை அவரது கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால் இந்த கொள்கைகளை தனது கட்டுப்பாட்டில் மாத்திரம் வைத்திருக்கும் நபர் கிருபை (இரக்கம்) என்கிற குணத்தை மேன்மேலும் வளர்ச்சி செய்ய வேண்டும். இவைகளை நாம் கழுத்திலே பூண்டு கொள்ள வேண்டும். இதன் கருத்து ஒரு கழுத்துமாலை (நெக்லெஸ்) அல்லது நகை ஆகும். ஒரு மனிதன் அவனது கழுத்தில் கழுத்து மாலையை போட்டுக் கொள்ளுவது போல, ஒரு ஆபரணத்தை போட்டு காண்பிப்பது போல, இந்த குணலட்சண பண்புகள் ஆபரணத்தைப் போல இருக்கின்றன. அதற்கு பிரதானமான இடத்தை கொடுங்கள். ஏனெனில் உங்களை சிறந்தவர்களாக்க உதவும். உங்களை இன்னும் அதிகமாக தேவனுக்கு ஏற்புடையவர்களாக்க உதவும்.

ஒரு ஆபரணத்தை காட்டுவதற்கு கழுத்தே சரியான இடமாக இருக்கிறது. ஆபரணம் என்பது விசேஷமாக கவனத்தை கவருகிறதாகவும் அலங்காரமானதாகவும் இருக்கிறது. ஆகையால் இந்த உயர்ந்த குணங்களை, நமது வாழ்க்கையின் சகல காரியங்களிலும் வெளிப்படுத்தக் கூடிய இடத்தில் நாம் கட்டிக்கொள்ள வேண்டும். நாம் வாங்கினாலும் விற்றாலும் என்ன செய்தாலும் இந்த ஆபரணங்களை நாம் அணிந்து கொள்ள வேண்டும். மனிதனுடைய அல்லது ஸ்தீரியினுடைய குணலட்சணம் என்ன என்பதை சரியாக வெளியே அல்லது மிகவும் முன்பக்கம் காண்பிக்கும். மற்றவர்களை நாம் சந்திக்கும் பொழுது அவைகள் காணப்பட வேண்டும். நம்மைக் குறித்து இழிவானதோ, கஞ்சத்தனமோ, மட்டமானதோ இருக்கக்கூடாது.

## கிருபையையும் சத்தியத்தையும் இருதயத்தில் மறுபடியும் எழுதுதல்

இதைக் காட்டிலும் கிருபையையும் சத்தியத்தையும் நாம் இதயத்திலே எழுதிக்கொள்ள வேண்டும். ஆதியிலே தேவன் ஆதாமின் இருதயத்தில் தெய்வீக சட்டத்தை எழுதினார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். சத்தியமும் கிருபையும் தெய்வீக இருதயத்தில் தெய்வீக குணங்கள் என்பதை நாம் அறிவோம். தேவன் கிருபையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும், தயவுள்ளவராகவும் இருக்கிறார். தேவன் இந்த குணலட்சண பண்புடையவராயிருப்பதால், அவர் மனிதனை தமது ரூபத்தின்படி தமது சாயலின்படியும் படைத்த பொழுது, இந்த தமது குணலட்சண பண்புகளுடன் தான் படைத்தார். மனிதன் அநீதியுள்ளவனாக, உண்மையில்லாதவனாக படைக்கப்படவில்லை.

ஆனால் மனிதன் தனது ஆதி பரிபூரணத்திலிருந்து விழுந்தான். நூற்றாண்டு காலமாக அபூரண மனம் மற்றும் சரீரத்துடன் மற்றவைகளுக்கு தாழ்வு உண்டாகும்படி தங்கள் சுய திருப்தியில் அக்கறை கொண்டதால் கிருபையும் சத்தியமும் தொடர்ச்சியாக தண்ணீர் சொட்டுவது போல, கல்லில் பொறிக்கப்பட்டவைகள் தேய்மானத்தினால் அழிவது போல, இருதயத்திலிருந்து மிகவும் அழிந்து போயிருக்கின்றன. குணலட்சணங்களை ஒருவர் குறிப்பிட்ட காலத்திற்குள் உணர்ந்து புரிந்து கொள்வது அரிதானது. ஆகையால் நாம் மனுக்குலத்தில் சிலர், நீதி, கிருபை ஆகியவற்றில் முழு உணர்வுகளையும், பொறுமை, தயவு, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகியவற்றில் ஏறக்குறைய சகல உணர்வுகளையும் இழந்திருப்பதை நாம் காண்கிறோம். இருதயத்துக்குரியவைகளாகிய இந்த பண்புகள் அனைத்தும் ஆதியிலும் தேவனால் அங்கே வைக்கப்பட்டன. இவைகள் சிலரின் ஏறக்குறைய அழிந்து போயின, மற்றவர்களிடம் இன்னும் அதிகமாக அழிந்து போயின.

## தேவனுடைய பராமரிப்பின் நோக்கம்

புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழும், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் ஊழியத்தின் மூலமாகவும் தேவன் மனித இருதயத்தில் வைத்தும் இப்போது சுய நலத்தினால் அழிந்து போயிருக்கிற ஆதி குணலட்சணங்களை மறுபடியும் மனித இருதயத்தில் எழுத தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார். “இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடு யூதா குடும்பத்தோடும் உடன்படிக்கை பண்ணுவேன்..... நான் என் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன்.” (எரேமியா 31:31:33) “உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்களை மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன்.” (எசேக்கியல் 36:26)

தேவனுடைய பிரமாணம் சத்தியம் மற்றும் கிருபையின் பிரமாணமாக இருக்கிறது. தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் நீதியாயிருக்கிற சகலத்தையும் சத்தியம் உள்ளடக்கியிருக்கிறது. கிருபையானது குணலட்சணத்தின் சகல கருணைகளையும் உள்ளடக்குகிறது. குணலட்சணத்தில் இந்த பண்புகளை திரும்ப எழுதக்கூடிய காலம் ஆயிர வருட யுகமாக இருக்கும். தெய்வீக குணலட்சணத்தை இருதயத்தில் திரும்ப எழுதக்கூடிய இந்த வேலை உலகத்தில் சீக்கிரத்தில் ஆரம்பித்து ஆயிரம் வருட யுக முழுவதும் நடைபெறும். இது சபையில் முன்னரே ஆரம்பித்து விட்டது. நாம் இந்த பண்புகளை நமது இருதயத்தில் எழுதுகிறோம். கிறிஸ்துவின் பள்ளியில் நுழைவது கட்டாயமானது அல்ல, சுய விருப்பத்துடன் செய்வது. அடுத்த யுகத்தில் மனுக்குலமானது இந்த பண்புகளை தங்களது இருதயத்தில் மத்தியஸ்தரின் உதவியுடன் எழுத வேண்டும். மனுக்குலத்தை நீதிக்குள் கொண்டு வருவதற்கு அடிகள் இருக்கும். அவர்கள்

வேண்டுமென்றே நீதியின் பிரமாணத்துக்கு கீழ்ப்படிய மறுத்தால் அவர்கள் அழிக்கப்படுவார்கள்.

ஆனால் இப்பொழுது கீழ்ப்படிதல் என்பது சுய விருப்பத்துடன் செய்வது. இந்த பாடங்கள் நமது இருதயத்தில் எழுதப்பட விரும்புகிறோம் என்று அறிவிக்கிறோம். இதை இறுதியில் அடைவதற்கு, நாம் பள்ளியில் நுழைந்து, மாபெரும் போதகரிடம் நம்மை ஒப்புக்கொடுப்போம். நமது வாழ்க்கையில் பல்வேறு பராமரிப்பின் மூலமாக இன்னும் நாம் எங்கே இந்த பண்புகளை இன்னும் நமது இருதயத்திற்குள் பொறிக்கவில்லை என்பதை அவர் காட்டுகிறார். நாம் பொறுமைக்காக ஜெபிப்பதால், இந்த குணம் நமது இருதயங்களில் உண்டாகும்படி அனுபவ பாடங்களை நமக்கு தந்து, அது மேன்மேலும் பலப்படும்படி செய்கிறார். நாம் அன்பு என்கிற குணத்திற்காக ஜெபிப்பதால், அவர் அன்பிற்கான சோதனையை அவர் நமக்கு தருகிறார். இரக்க குணத்தை அபிவிருத்தி செய்யும்படி கேட்பதால், நமது இரக்க குணத்தை அபிவிருத்தி செய்கிற அதிக எதிர்ப்பை நாம் காண்கிறோம். இப்படியாக நமது இருதயத்தில் கிருபையையும் அன்பையும் எழுதுவதற்கு அநேக சந்தர்ப்பங்களை தேவன் தருகிறார்.

அன்பையும் நீதியையும் சிநேகிக்கிற, அக்கிரமத்தையும் அநீதியையும் வெறுக்கிற இருதய நிலைமையை நாம் அடைய வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக, இப்போது இந்த பண்புகளை அபிவிருத்தி செய்யக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தை நாம் பெறுகிறோம். நமது பாடங்களை கற்றுக்கொள்ளுவதில் உண்மைத் தன்மையை நாம் நிரூபித்தால், நம்மை அவர் ஆயிரம் வருட யுகத்தில், ஆளுகை செய்ய பயன்படுத்தவும் நம்மை உலகத்தின் ஆளுனராகவும், நியாயதிபதியாகவும் போதகராகவும் ஆக்கவும் தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார்.

### கிறிஸ்தவ பிரமாணம் கிறிஸ்தவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறது

நமது தலைப்பு வசனத்தின் இரண்டாவது பகுதி, கிறிஸ்தவர்களை நோக்கி அல்ல, எபிரேயர்களை நோக்கி கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அந்த சமயத்தில் கிறிஸ்தவர்கள் இல்லை. அந்த வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக காணப்படாமல் ஜனங்களுக்கு புத்திமதியாக இருந்தது. கர்த்தர் அவர்களிடம் அதிகமாக எதிர்பார்த்ததாக நினைத்தார்கள். இது அப்படி இருந்ததால், பிரமாணத்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துக்கொள்ளாதிருந்தார்கள். இந்த காரியங்களை குறித்து கர்த்தர் ஒரு குறிப்பிட்ட அறிக்கையை கொடுத்திருப்பதாக தெரிகிறது. உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது மூன்று காரியங்களே: நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தை உன்னிடத்தில் கேட்கிறார். இது பிரமாணத்தின் மொத்த கூட்டுத் தொகையாக இருக்கிறது.

இஸ்ரயேல் ஜனங்கள் பிரமாணத்தின் தேவைகளுக்கேற்ப முடிந்தவரை நடக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். தேவன் ஏற்ற காலத்தில் அவர்களை புதிய உடன்படிக்கைக்குள் கொண்டு வர தீர்மானித்திருந்தார். புதிய உடன்படிக்கையானது, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, அவர்களை சதையான இருதயம் உள்ளவர்களாக மாற்றும். ஆனால் அவர்கள் இந்த பிரமாணத்திற்கு இசைவாக, முடிந்தவரை நடந்து, நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்தால் அதற்கேற்றாற் போல் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இந்த பிரமாணம் எபிரேயர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது கற்பிக்கிற கொள்கைகள் அகில உலகத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. தேவனுடன் நிற்கின்ற ஒவ்வொருவரும் நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, மனத்தாழ்மையாய் நடக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் பிரமாணத்தின் ஒவ்வொரு மற்றும் தேவனுடைய திட்ட நிலையின் கருத்தை கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கிறது. இது அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கிறது. அது பரிபூரண நிலையின் திட்ட அளவைக் அவர்களுக்கு காண்பிக்கிறது. ஆனால் ஒரு கிறிஸ்தவனுடைய திட்ட அளவு நியாயப்பிரமாணத்தின் திட்ட அளவைக் காட்டிலும் உயர்ந்ததாக செல்லுகிறது. நியாயப்பிரமாணமானது பொன்னான கற்பனையின் பெருக்கமாக மட்டுமே இருக்கிறது. அதாவது மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ, அதையே நீ பிறருக்கு செய் என்பது தான். மற்றவர்கள் நியாயஞ்செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் நியாயஞ்செய்ய வேண்டும். மற்றவர்கள் உன்னிடம் இரக்கமாயிருக்க வேண்டும் என்று நீ எதிர்பார்த்தால், நீ அவர்களிடம் இரக்கமாயிருக்க வேண்டும்.

இந்த குணலட்சணங்களை நினைத்து, எது முதலாவது இருக்க வேண்டும் என்று கவனிக்கும் போது, நீதிக்கு குறைவானதை கொடுக்க நாம் நினைக்க முடியாது. அதோடு கூட சந்தர்ப்பம் சூழ்நிலை அனுமதிப்பதற்கு ஏற்ப, நாம் இரக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் நீதிக்கு குறைவானது எதையும் நினைக்கக் கூடாது. எனினும் நாம் மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது, நாம் முன்னரே சொன்னது போல முழுமையான நீதியை எதிர்பார்க்க முடியாது. முழு மனுக்குலமும் அபூரணமானது என்பதை நாம் நினைவு கூர வேண்டும். தேவனுடைய கிருபையால், சராசரியைக் காட்டிலும் நாம் அதிகம் நீதியுள்ளவர்களாக, அல்லது அதிகம் இரக்கமுள்ளவர்களாக இருக்கக் கூடுமானால், அது தேவனுடைய ஆவியினாலாகும்.

### நீதியான நடத்தையில் தேவனுடைய திட்ட அளவு

நாம் கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது, நாம் அவரால் போதிக்கப்படக்கூடிய மனநிலையில் இருக்கிறோம் என்பதையும், நாம் அவரது நற்குணத்தையும் நமது முக்கியமற்ற தன்மையை உணரக்கூடும் என்பதையும் குறிக்கிறது. மேலும் அவர் அனுப்புகிற அறிவுறுத்தல்களை பெற்றுக் -கொண்டிருக்கிறோம் என்பதையும் குறிக்கிறது. நமது இனத்தை சிருஷ்டிக்கும் போது நாம் பெற்றிருந்த அவரது சாயலை பெரும்பாலும் நாம் இழந்திருக்கிறோம். ஆகையால் நாம் தாழ்மையாகவும் எல்லா காரியங்களிலும் போதிக்கப்படக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

நமது தலைப்பு வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல, இஸ்ரயேலரிடமிருந்து அவர் எதிர்பார்த்ததையும்

சபையிடமிருந்து எதிர்பார்ப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதைக் காட்டிலும் மேலானதை தேவன் சபையிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்று நாம் கூறலாம். இது எந்த ஒரு ஜீவியிடமிருந்தும் எதிர்பார்க்கக் கூடிய நீதி ஆகும். சபையின் விநோதமான நிலைமை என்னவென்றால், இது எதிர்பார்க்கக் கூடியது அல்ல. ஆனால் சலுகை ஆகும். ஆனால் சபையில் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் இன்னும் உயர்ந்த கொள்கைகளை இயக்குகிறதை நாம் காண்கிறோம். அதாவது பலியின் ஜீவியம். இயேசு, பிதாவையும் நீதியையும் சிநேகித்து, தமது பூமிக்குரிய விருப்பங்களையும், பூமிக்குரிய அபிலாஷைகளையும் உரிமைகளையும் பலியிட்டு, நமக்கு ஒரு முன் மாதிரியை வைத்தது போல, நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும். அவர் நீதியைக் காட்டிலும் அதிகமாக செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் அவர் அதிகமாக செய்ய அனுமதிக்கப்பட்டார். அதே போல சபையிடமும் இருக்கிறது. நீதியைக் காட்டிலும் நாம் அதிகமாக செய்ய எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் நாம் அதிகமாக செய்ய அனுமதிக்கப்படுகிறோம். நாம் நமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, முடிவு பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால், சீக்கிரத்தில் மகிமையான ராஜ்யத்தை, நாம் ஜெபித்துக்கொண்டிருக்கிற ராஜ்யத்தை கொடுக்க தேவன் விரும்புகிறவர்களில் ஒருவராக நாம் எண்ணப்படுவோம்.

### அன்பின் பல்வேறு தரங்கள்

நாம் இந்த பலியின் நிலைமைக்கு நாமாக வந்த பிறகு, நாம் எடுத்திருந்த இந்த பொருத்தனையில் நாம் அடிமைப்பட்டிருந்து, நமது பொருத்தனைகளோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். நமது அழைப்புக்கு இசைவாக நமது ஜீவனை கொடுப்போம் என்று பொருத்தனை பண்ணினோம். “பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்.” இன்னும் கூட தேவன் நம்மிடமிருந்து நீதிக்கு மேலாக கேட்கவில்லை. ஆனால் நாம் நமது உடன்படிக்கைக்கு எந்த அளவுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்பதை காண அவர் காத்துக்கொண்டும் கவனித்துக் கொண்டும் இருக்கிறார். நாம் இயேசுவுக்கு உடன் பலி செலுத்துகிறவர்களாக இருந்தால் நாம் அவருக்கு உடன் சுதந்தரருமாயிருப்போம். நமது அர்ப்பணத்தில் அவரது நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்டோம். நாம் பின்வாங்கி போய் திரும்பப் பெறும் சலுகையை பெற முடியுமா? முடியாது. நாம் அதை முற்றிலுமாக அர்ப்பணித்து விட்டோம்! பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதே நாம் செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. உடன்படிக்கைக்கு விரோதமாக சென்றால் இரண்டாம் மரணம், நித்திய அழிவே கிடைக்கும்.

அன்பில் பல்வேறு தரங்கள் இருக்கின்றன. நாம் நம்மை அர்ப்பணம் செய்த தரம் பலியின் அன்பு. இது ஒரு சகோதரனிடம், அயலானிடம், சத்துருவிடம் நீதியாக இருப்பதற்கும் அப்பாற்பட்டது. இது தேவனுடைய அன்பு, இது அனைவரையும் இணைத்துக் கொள்ளுகிற அன்பு, அனைவரிடமும் விரிவடைந்த அன்பு.

நமது தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்ட தேவைகள் சரியானதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத் –தக்கதாகவும் இருக்கின்றன. எதிர்காலத்தில் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக தேவன் போதித்துக் கொண்டிருக்கிறவர்களிடமிருந்து இதற்கு குறைவாக தேவன் எதிர்பார்க்கமாட்டார் என்பது தெளிவாக இருக்கிறது. தீர்க்கதரிசி மூலமாக குறிப்பிடப்பட்ட இந்த குணங்கள், அன்பு என்கிற ஒரே வார்த்தையில் அறிந்து கொள்ளப்படுகிறது. நமது அண்டை வீட்டாரை, நமது சகோதரரை, நமது குடும்பத்தாரை, நம்மை நீதியுடன் நடத்த வேண்டும் என்று அன்பானது எதிர்பார்க்கிறது. மேலும் நாம், மற்றவர்களது உரிமைகளை அதாவது சரீர சம்பந்தமான உரிமைகள், நீதி சம்பந்தமான உரிமைகள், அறிவு சம்பந்தமான உரிமைகள் மற்றும் அவர்களது சுதந்தரங்களை உணர்ந்து கொள்ளுவதை வளர்த்துக் கொள்ள நாட வேண்டும்.இதை உணர்ந்து கொண்டு அதை மறுக்கவோ, சுருக்கவோ நாடக்கூடாது. ஆனால் இன்னும் அன்பானது, சகோதரர்களுக்காக ஜீவனை சந்தோஷமாகக் கொடுக்கக்கூடிய பலியின் ஆவியைப் பெற நம்மை வழி நடத்துகிறது.

**R5310**

## PRAYER THE VITAL BREATH OF THE NEW CREATURE

# ஜெபமானது புது சிருஷ்டிக்கு ஜீவாதார மூச்சு

“சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்.”– லூக்கா 18:1

இயேசு சொன்ன உவமையின் கருத்து, “மனிதர்கள் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்” என்பதாகும். எப்படி ஒரு அநீதியான நியாயதிபதி, அதிகமாக தொந்தரவு பண்ணப்பட்டபடியால், கொள்கையைப் பற்றி கவலைப்படாதவனாயிருந்தும் முடிவாக நியாயம் செய்ய தீர்மானித்தான் என்பது குறித்து இந்த உவமை சொல்லுகிறது. இந்த உவமையில் ஒரு ஸ்திரீ, தனக்கு தீங்கு செய்கிறவர்களிடமிருந்து தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று தொந்திரவு பண்ணிக்கொண்டிருந்தாள். இந்த விதமாகவே நாம் ஜெபத்தில் தொந்திரவு பண்ண கற்பிக்கப்பட வேண்டும் என்று தம்முடைய ஜனங்கள் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணுவதற்காக இதை ஒரு விளக்கமாக கர்த்தர் கொடுக்கிறார். அவர்கள் எப்பொழுதுமே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்றோ, முழங்காலிலிருந்து எழக்கூடாது என்றோ, ஜெபத்தைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது என்றோ கூறாமல், சோர்ந்து போகாமல், மனம் தளராமல் தொடர்ந்து ஜெபம் பண்ண வேண்டும் என்று கூறுகிறார்.

சரியானபடி ஜெபிக்கவும் தேவனுடைய பிள்ளை எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதையும் அறிய வேண்டும். இல்லையென்றால் அவன் தவறான காரியங்களுக்காக ஜெபித்து, தேவன் அதைக் கொடுக்க விருப்பமில்லாதிருப்பார். ஜெபிப்பதற்கான சரியான காரியங்கள் எவை என்பதை கர்த்தர் நமக்கு அறிவிக்கிறார். பூமக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல

ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்தில் இருக்கிற பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளு-கிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது எவ்வளவு நிச்சயம். பூமிக்குரிய பிதாக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூமிக்குரியவைகளை கொடுக்கிறார்கள். பரலோகத்தில் இருக்கிற பிதா தம்முடைய பிள்ளைகளுக்கு பரலோக காரியங்களைத் தருகிறார். உலகத்தின் மனுக்குலம் தேவனை பிதா என்று அழைக்க அனுமதிக்கப்படவில்லை. தேவனுடன் திரும்ப உறவுக்குள் வருவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த வழியை இயேசு தமது மரணத்தினால் திறந்தார்.

இயேசுவுக்கு முன்னர், தேவனுடைய யூத பிள்ளைகள் வந்து மரிக்கவில்லையா? நாம் இல்லை என்று பதிலளிக்கிறோம். தேவனுடைய கிருபை மிகவும் அதிகமாக காண்பிக்கப்பட்டது ஆபிரகாமுக்கு ஆகும். அவர் தேவனுக்கு சிநேகிதன் என்று மட்டுமே அழைக்கப்பட்டார். “மோசே, பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்.” உண்மையில்லாதிருந்த யூதர்கள் பணிவிடைக்-காரர்களாகக் கூட இல்லை. ஆனால் இயேசு வந்தபோது, சிலரை வீட்டின் பணிவிடைக்காரரிலிருந்து வீட்டின் குமாரர்களாக ஆக சாத்தியமாக்கினார். “அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.... அவரை ஏற்றுக்-கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.” (யோவான் 14:11,18) இந்த சலுகை உடனடியாக கொடுக்கப்படவில்லை. ஆனால் இயேசு அவரது ஓட்டத்தை முடித்து, பரலோகத்திற்கு எழுந்தருளி. பரிசுத்த ஆவியை தமது சீஷர்களுக்கு ஊற்றும் வரை இந்த சலுகை கொடுக்கப்பட்டதாக கருதப்பட்டது. அதன்பிறகு தான் தேவனுடைய பிள்ளைகளாகும்படி சலுகை கொடுக்கப்பட்டது.

சுவிசேஷ யுகம் முழுவதும் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி சலுகை பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டுள்ள அனைத்து வாக்குத்தத்தங்களும் இவர்களை சார்ந்ததாயிருக்கிறது. இந்த வகுப்பாரில் யூதர்கள் மாத்திரமல்ல, புறஜாதிகளும் இருக்கிறார்கள். யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் காலம் முடிந்தபிறகு புறஜாதிகளுக்கும் கதவு திறக்கப்பட்டிருந்தது. இப்படியாக நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகவும், தேவனுடைய பிள்ளைகளாகிய இந்த வகுப்பாருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த சகல காரியங்களுக்கும் சுதந்தரராகவும் ஆகியிருக்கிறோம். நாம் ஜெபத்தில் தேவனிடம் செல்லும் போது, அது புது சிருஷ்டிக்குரிய ஜெபத்தின் சலுகையாக இருக்கிறது. பழைய சிருஷ்டியாக இருப்பது நிறுத்தப்பட்டு. புது சிருஷ்டியாக ஆகவில்லை என்றால் ஜெபிக்கும் சலுகை கிடையாது. இதில் புது சிருஷ்டியான பெற்றோர்களின் பிள்ளைகள் மட்டுமே விதிவிலக்கு. தேவனுடைய கிருபை அவர்களுக்கு இருப்பதற்கு காரணம் அவர்களது பெற்றோர்களின் ஆவிக்குரிய அக்கறையினால் மட்டுமே.

## புது சிருஷ்டிகளின் மாபெரும் தேவை

நமது தலைப்பு வசனம், புது சிருஷ்டிகள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறது. இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டுகால தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை இவர்கள் ஆராய்ந்து எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆவியினால் ஜெனிப்பிக்கப்-பட்டவர்கள் இப்படியாக தேவனுடைய பிள்ளைகளின் சலுகைகளும் உரிமைகளும் என்ன என்பதை அறிந்து கொள்ளுவார்கள். பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் நல்ல ஈவுகளைக் காட்டிலும் மேலான பரிசுத்த ஆவியை பரலோக பிதா தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்க விருப்பமுள்ளவராயிருக்கிறார். (மத்தேயு 7:11)

புது சிருஷ்டிக்கு தேவைப்படுகிற ஒன்று பரிசுத்த ஆவியாகும். புது சிருஷ்டியானது புதிய சுபாவத்திற்குரிய. கனம், மகிமை. சாகாமைக்குரிய சோதனையில் இருக்கிறது. இவைகளுக்காக பாத்திரராயிருப்பவர்கள் மாத்திரமே அதை பெற்றுக்கொள்ளக்கூடும். பூமிக்குரிய உத்வேகத்தை குறைத்து, அழித்து, ஆவிக்குரிய உத்வேகத்தை விளைவுபடுத்தும் நிபந்தனைகள் மூலம் அவன் பிதாவானவருடன் ஆவிக்குரிய உறவை பெற்றிருக்கிறான். ஆகையால் அவன் தன்னை புது சிருஷ்டியாக பலப்படுத்தி, புது சிருஷ்டியாவதற்கு தேவனுடைய பரிசுத்த ஆவி அவனுக்கு தேவைப்படுகிறது. இதன் விளைவாக தேவன் இதை நமக்கு அளிக்க விருப்பம் உடையவராக இருக்கிறார். நாம் அதை கேட்பதில் சந்தோஷம் அடைகிறார். பூமிக்குரிய விருப்பங்கள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று பொருளல்ல. நம்முடைய ஆவிக்குரிய நலன்களுக்கு நமக்கு என்ன தேவை என்பதை பரம பிதா அறிந்திருக்கிறது போல, பூமிக்குரிய நலன்களுக்கு என்ன தேவை என்பதை அவர் அறந்திருக்கிறார். தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதாகமத்தில் நமக்கு தேவையான வழிமுறைகளை கொடுத்திருக்கிறார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நாம் கிருபையிலும் அறிவிலும் அவரது ஆவியிலும் வளருவதால் நாம் மேன்மேலும் ஞானத்தில் வளரும்படி இந்த வார்த்தை செய்கிறது. இதன் மூலம் ஏற்ற காலத்தில் நாம் ஜெபத்தில் எதை கேட்க வேண்டும், எதை கேட்கக்கூடாது என்பதை நாம் அறிவோம். நமது அனுபவத்தின் ஆரம்பத்தில் இதை அந்த அளவுக்கு அறியமாட்டோம். புறஜாதிகள், அவர்கள் அதிகமாக பேசுவதால் அவர்களது ஜெபம் கேட்கப்படும் என்று எண்ணி திரும்பத்திரும்ப சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜெபத்தைக் குறித்து தேவன் கூறுகிறார். அவர்களது ஜெபம் சொன்னதையே திரும்பத்திரும்ப சொல்வதால் வீணாகிறது. முதலாவது வேண்டுதல் வீணாகிறது. அதைத் தொடர்ந்து வருகிற அனைத்து வேண்டுதல்களும் வீணாகிறது. ஏனெனில் இவையனைத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜெபத்திற்கு அடிப்படையானதாக இல்லை.

## நோக்கம் ஒரு முக்கியமான கருத்து

கிறிஸ்துவுடன் பலியின் உடன்படிக்கைக்குள் வந்திருக்கிற அனைவரும் ஜெபிக்கும் உரிமையை பெற்றிருப்பதை உணரக்கூடும். எதற்காக அவர்கள் ஜெபிக்கலாம்? அவர்கள் பூமிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்கமாட்டார்கள். அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவில்லாத வேண்டுதல்களை பரமபிதா பதிலளிக்க மாட்டார். முக்கியமான வேண்டுதல்களை ஏறெடுக்கிற சிலரைக் குறித்து பரிசுத்த யாக்கோபு பேசுகிறார். அவர் கூறுகிறதாவது: “நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க

வேண்டும் என்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளா-மலிருக்கிறீர்கள்.'' (யாக்கோபு 4:3)

இங்கே உலக இச்சை என்பது ஆசைகளை குறிப்பிடுகிறது. நாம் பூமிக்குரிய ஆசைகளை நிறைவேற்றும்படி கேட்கக்கூடாது. உதாரணத்திற்கு, ஒரு பத்து லட்சம் டாலர் பணத்தை அனுப்பும்படியும், அதை என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவருடைய வேலைக்கு எப்படி பயன்படுத்துவது என்பதையும் நாம் அறிவோம் என்று கூறி ஜெபிக்கலாம். தேவன் அதை கொடுக்காமலிருக்கலாம். ஏனெனில் நாம் அதை தவறாக கேட்டிருக்கலாம், ஆனால் நாம் அதை ஞானமாக கேட்டோம் என்று நினைக்கலாம். நாம் கர்த்தரிடம் கேட்கும் போது, அதன் நோக்கம் தனித்தன்மையுடன் இணைந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய காரியத்தில் நாமே கேட்டுப்பார்க்க வேண்டும். பத்து லட்சம் டாலரை கேட்பது, அதை பயன்படுத்தி நாம் பிரகாசிப்பதற்காகவா? அப்படியிருந்தால் அந்த ஜெபம் மொத்தத்தில் சரியானது அல்ல. அப்படிப்பட்ட ஜெபத்தை நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில் நாம் ஏறெடுப்போம். அதற்காக பிதாவானவர் நம்மிடம் கோபித்துக்கொள்ளமாட்டார். பெரியவனானபோது நாம் மன்னிக்காத காரியத்தை, குழந்தை செய்யும்போது மன்னிப்போம்.

இந்த ஜெபத்தைக் குறித்து நமது கர்த்தர் ஒரு காரியத்தை நமக்கு நினைவுபடுத்துகிறார். "நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ, அ து உங்களுக்கு செய்யப்படும்.'' (யோவான் 15:7) எப்படிப்பட்ட பரந்த கூற்று இது! நாம் எதை வேண்டுமென்றாலும் கேட்கலாம் என்று முதலில் நமக்கு தோன்றும். ஆனால் அது குறிப்பிட்ட எல்லைகளை உடையதாக இருக்கிறது. இப்படியாக ஜெபம் பண்ணக்கூடியவர்கள் யார்? இவர்கள் முன்னரே அவரது சரீர அங்கங்களானவர்கள், தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்தவர்கள், பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலை பெற்றவர்கள். மேலும் நிலைத்திருத்தல் என்ற வார்த்தை இந்த உறவுக்குள் நுழைவதை மாத்திரமல்ல. அங்கே தரித்திருப்பதை, தங்கியிருப்பதை குறிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அவருடன் நிலைத்து நிற்பவர்கள்.

"என் வார்த்தை உங்களில் நிலைத்திருந்தால், தேவனுடைய வார்த்தை நம்மில் நிலைத்திருத்தல் என்பது நாம் தேவனுடைய வார்த்தையின் அறிவை பெற்றிருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிவதற்கு தேவனுடைய வார்த்தையை ஆராய்வதை இது அவசியமாக்குகிறது. நாம் அவசரமாக ஜெபித்து ஒரு பெரிய தவறை செய்துவிட்டு, நான் தவறு செய்துவிட்டேன். தவறான காரியங்களை கேட்டுவிட்டேன் என்று சொல்லக்கூடாது. இதைக் குறித்து தேவனுடைய வார்த்தைகள் என்ன சொல்லுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். யாராவது தேவனுடைய வார்த்தையில் நன்கு பரிச்சயமாகியிருந்தால், தனது ஜெபத்தை பரிசுத்தப்படுத்தக் கூடிய நிபந்தனைகளை சந்தித்துவிட்டேனா இல்லையா என்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும். இந்த நிலைமைக்கு வந்த பிறகுதான் சந்தேகமில்லாமல் தனது வேண்டுதல்களை தொடரலாம். அதன் பிறகுதான் தனது வேண்டுதல்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை அறிந்து கொள்வார். நாம் கேட்கக்கூடிய சில காரியங்கள் என்ன?

### ஜெபத்தில் கேட்கவேண்டிய சில காரியங்கள்

தேவனுடைய ராஜ்யம் வரவேண்டும் என்பது நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்களில் ஒன்று. நாம் தொடர்ந்து கிருபாசனத்தண்டைக்கு சென்று, தேவன் பூமியிலே ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்த சித்தங்கொண்டிருக்கிறார் என்பது குறித்து பாராட்டலாம். சந்தேகம் இல்லாமல் ராஜ்யத்திற்காக ஜெபிக்கலாம். வேறெதற்காக நாம் ஜெபிக்கலாம்? "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்'' என்று நாம் ஜெபிக்கலாம். ஆனால் இது மாம்சத்திற்குரிய உணவு அல்ல. இது அத்தியாவசிய தேவை. நமது தேவைகளுக்கு ஜெபிக்கும்படி கர்த்தர் நமக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறார். சிறந்ததை பெற நாம் தீர்மானிக்க வேண்டும். நமது முயற்சிகளை மட்டுமே நாம் நம்பக்கூடாது. கர்த்தருடைய மேற்பார்வையையும் நாம் நம்ப வேண்டும். ஆகையால் உலகப்பிரகார விநியோகம் குறைவாக இருந்தால், நாம் சிக்கனம் என்ற பாடத்தை கற்றுக்கொண்டு நாம் பெற்றிருப்பதை பராமரித்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஊதாரித்தனமாக இல்லாதபடி நாம் வாழ்க்கையில் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசு அப்பத்தையும் மீனையும் திரளானவர்களுக்கு அளித்த போது, மீதியானதை கூடைகளில் எடுத்து வைக்கும்படி கட்டளையிட்டு, பொருளாதாரத்தை விளக்கினார். நாம் பெற்றிருப்பது ரொட்டியும் தண்ணீரும் அல்லது உருளைக்கிழங்கும் உப்பு மட்டும் என்றால் நாம் அதை நன்றியுடன் சாப்பிட வேண்டும். நமக்கு தேவையானதை மட்டுமே கேட்க வேண்டும். தின்பண்டத்தையோ, கேக்கையோ. ஐஸ்கிரீமையோ கேட்கக்கூடாது. தேவன் நமக்கு ஆடம்பரமானவைகளை நிறுத்திவிட்டு, நமக்கு தேவையை மட்டும் கொடுத்தால் நாம் நன்றியுடனும் திருப்தியுடனும் இருக்க வேண்டும். ஆனால் நாம் ஜெபிக்க வேண்டும், பயப்படக்கூடாது

நாளைக்கு நமக்கு எதுவும் கிடைக்கவில்லை என்றால் என்ன? இன்றைக்கு எதையாவது வீணாக்கினாயா? இன்றைக்கு தேவையானதைக் காட்டிலும் இரண்டு மடங்காக சாப்பிட்டாயா? அப்படியென்றால் கர்த்தர் உனக்கு ஒருவேளை சில பாடத்தை கற்றுக்கொடுக்கலாம். அது உனக்கு புது சிருஷ்டிக்கு நல்லதாக இருக்கும். நீ ஞானத்தையும் சிக்கனத்தையும் கடைபிடித்தால், தேவையானவைகளை அவர் தருவார். தீர்க்கதரிசி கூறுகிறதாவது: "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய் கிடைக்கும்.'' (ஏசாயா 33:16)

தீமைகளிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி நாம் ஜெபிக்கலாம். இது தீயவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் அவனுடைய தாக்குதல்களை எதிர்த்து நாம் ஜெயங்கொள்ள நம்மால் முடியாது என்பதையும் காணும்படி வழி நடத்துகிறது. எல்லா நேரங்களிலும் கர்த்தரின் உதவி நமக்கு தேவைப்படுகிறது. நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

நாம் நமது மீறுதல்களை மன்னிக்கும்படி ஜெபிக்கலாம். நமது கர்த்தர் மாதிரி ஜெபத்தில் நமது அனுதின மீறுதல்களை மன்னிக்கும்படி குறிப்பிடுகிறார். இந்த மீறுதல்கள் நமது மாம்சீக பலவீனத்தினால் உண்டானவை. இன்றைய நமது மாம்சீக மீறுதல்கள் பத்து வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைவாக இருக்க வேண்டும்.

நாம் ஜெபத்தில் ஒரே மாதிரியான வார்த்தைகளை பயன்படுத்தாமலிருப்பது நல்லது. ஆவியின் விருப்பங்களை நாம் முன்னரே சிந்திக்க வேண்டும். அதாவது அதிகமான விசுவாசம், அதிகமான பொறுமை, அதிகமான சாந்தம், அதிகமான அன்பு இவைகளை நாம் கேட்கலாம். நாம் தெய்வீக பராமரிப்புக்காக நன்றி சொல்லி. அது தொடரும்படி மன்றாடலாம். இப்படிப்பட்ட ஜெபம் எளிமையாக இருந்தாலும் இதை பரலோக பிதா விரும்புவார். வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜெபங்கள் பொதுவாக நீண்டவைகளாக இல்லை. ஜெபத்தில் நமது நல்ல எண்ணங்களை, மனோபாவத்தை, நமது நாவு வெளிப்படுத்துகிற வார்த்தைகளை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார்.

நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் மற்ற கூற்றுகள், நாம் மதிமயக்கத்தில் வளரக்கூடாது என்று குறிப்பிடுவதாக காணப்படுகிறது. நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்தை ஜெபித்தில் கேட்ட பிறகு. ஜெபம் உடனே கேட்கப்படாததால். தேவன் அதை கேட்கவே மாட்டார் என்பதை முடிவு பண்ணக்கூடாது. இது குறிப்பிட்ட, தனிப்பட்ட காரியங்களுக்கு பொருந்துவதாக காணப்படுகிறது. தேவையான உதவியை பெறுவதற்கு அடிக்கடி கிருபாசனத்தண்டைக்கு வந்து, நமது வாழ்க்கையில் சகல காரியங்களிலும் ஜெபத்தின் அனுகூலத்தை நமது மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை நமது தலைப்பு வசனம் உள்ளடக்கியிருப்பதாக காணப்படுகிறது.

## ஜெபத்தின் தத்துவம்

தேவனிடம் நாம் கேட்கவில்லையென்றால் அவர் நம்மை மறந்துவிடுவாரா? ஒரு பிதாவாக செய்ய வேண்டியதை புறக்கணிப்பாரா? அப்படி இல்லை என்று வேதவாக்கியங்கள் பதிலளிக்கின்றன. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக அபரிதமான ஏற்பாடுகளை செய்திருக்கிறார். தேவனுக்கான பயபக்தியும் ஜெபத்திற்காக விருப்பமும் நமது சுபாவத்தில் வைக்கப்பட்டுள்ள உயர்ந்த குணலட்சணமாக இருக்கும்படியாக நாம் அமைக்கப்பட்டிருக்கிறோம். முக்கியமான உறுப்புகளும் ஆன்மீகமும் நமது தலையின் மேல் பகுதியில் இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை அப்பியாசப்படுத்தி அனுபவிக்காதவர்கள் வாழ்க்கையிலிருந்து சரியான ஆசீர்வாதங்களை பெறவில்லை. சொல்லப்போனால். சிலர் அவர்களது மூளையின் வரவேற்பறையில் வசிப்பதற்கு பதிலாக கட்டிடத்தின் அடித்தளத்தில் வசிக்கிறார்கள். தலையின் உயர்ந்த மனோசக்திகளை அப்பியாசப்படுத்துவது மூலமே நமக்கு உண்மையான சந்தோஷம் வருகிறது. இங்கே, உயர்ந்த காரியங்களைக் குறித்து, உன்னதமான காரியங்களைக் குறித்து, சிறந்த காரியங்களைக் குறித்து தேவனுடன் பேசமுடியும்.

சிலரது இயற்கையான சுபாவம் மனித மனதின் உயர்ந்த குணங்களை குறித்து இல்லாமல் அடிப்படை குணங்களைக் குறித்தே இருக்கிறது. மற்றவர்களது சுபாவம் உயர்ந்த உணர்வுகளைக் குறித்து இருக்கும். ஆனால் எல்லாருமே அபூரணர்கள் தான். யாராவது பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் பள்ளிக்குள் வந்தால் அவர்கள் ஜெபிக்கும்படி போதிக்கப்படுகிறார்கள். ஏனெனில் இது அவர்களது இயற்கையான இணைந்த மனோ சக்திகளிலிருந்து உயர்ந்த பலன்களை அடைய சாத்தியப்படுத்தும். அவர்கள் தொடர்ந்து ஜெபத்தில் கர்த்தரிடத்தில் வந்து, தங்களது சொந்த மனதில் உயர்ந்த குணங்களை பதிவு செய்கிறார்கள். இப்படியாக புது சிருஷ்டி, பழைய சுபாவத்தின் உயர்ந்த மனோ சக்திகளை பயன்படுத்தி. மாம்சீக பலவீனத்திலிருந்து வளர்க்கப்பட்டிருக்கிற இயற்கையான பழக்கங்களிலிருந்து பழைய சிருஷ்டியை சீர்திருத்தச்செய்யும்.

## ஜெபத்தின் புறக்கணிப்பை அழிவு தொடரும்

ஜெபத்தின் மூலம் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் வருகிறது!. ஜெபம் புறக்கணிக்கப்பட்டால் ஒரு குறிப்பிட்ட அளவான நாச நோய் உள்ளே வருவதை நாம் காண்கிறோம். அதே சமயம் புது சிருஷ்டி ஜெபத்தில் கர்த்தரிடம் வருவதைத் தொடர்ந்தால். இப்படியாக புது சிருஷ்டி மனதின் உயர்ந்த உறுப்புகளை பயன்படுத்துகிறது. அது உயர்ந்த குணங்களை கொண்டு வருகிறது. இது சத்தியத்தையும் நீதியையும் உண்டாக்கும், புது சிருஷ்டியை வளரச் செய்யும். மேலும் புது சிருஷ்டியானது மூளையின் உயர்ந்த உறுப்புகளை பயன்படுத்தி குணலட்சண அமைப்பையும் கர்த்தரின் ஊழியத்தையும் முன்னேறச்செய்யும்.

ஜெபமானது புது சிருஷ்டியின் உயிர் முச்சாக இருக்கிறது. ஜெபிக்க வேண்டும் என்கிற கர்த்தரின் போதனையை உறுதிப்படுத்தினாலொழிய பழைய சரீரங்களை கட்டுப்படுத்தவோ, அவற்றிலிருந்து நன்மைகளை பெறவோ இயலாது. பூரணராக இருந்த நமது கர்த்தருக்கு ஜெபமானது சொந்தமாக இருந்து, அவர் பிதாவிடம் அடிக்கடி ஜெபத்தில் போக வேண்டியது அவசியமாக இருந்ததால், நாமும் கர்த்தரிடம் ஜெபத்தில் செல்வது அவசியமாக இருக்கிறது. இதன்மூலம் நாம் நமது சிந்தைகளை புதுப்பித்து மேன்மேலும் மறுரூபமாக்கப்படுவோம். நாம் எப்பொழுதுமே முழங்காலில் இருக்க வேண்டும் என்று பொருளல்ல. ஆனால் நாம் தொடர்ந்து அவரிடம் போக வேண்டும். முடிந்தால் குறைந்த பட்சம் இரவிலும் காலையிலும் நாம் போக வேண்டும்.

சிலர் ஜெபிக்கும் போது நின்று கொண்டிருப்பதை விரும்புவார்கள்; சிலர் முழங்காலில் இருப்பதை விரும்புவார்கள்; சிலர் கண்ணை திறந்து வைத்திருப்பார்கள்; சிலர் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்திலும் நாம் முடிவெடுக்கும்படி தேவன் விட்டுவிடுகிறார். ஆனால் தேவனுடனான அணுகுமுறை தினமும் இருக்க வேண்டும். விசேஷித்த ஜெபகாலம் என்று மட்டும் நாம் வைக்காமல், ஜெப ஆவியை நாம் பெற்றிருக்க வேண்டும். அது நமது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் இருக்க வேண்டும். நாம் வாழ்க்கையின் கடமைகளில் செல்லும் போது நான் இப்பொழுது தேவனுடைய சித்தத்தையும் வழியையும் பார்க்கிறேன் என்று எண்ண வேண்டும். இந்த காரியத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் மறுபடியும் ஜெபிப்பதை நிறுத்தாமல். கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படியாக அந்த நாளுக்குரிய அனைத்திலும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும் வழி நடத்துதலையும் நாம் பெறுவோம்.

சிலர் தேவனுடைய வழி நடத்துதலை பெரிதாக எடுத்துக் கொள்ளாதபடி என்ன செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்று கூறுவார்கள். எனக்கு யாரும் சொல்லித் தர வேண்டியது இல்லை. கர்த்தராக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி. அப்படிப்பட்டவர்கள் தாங்களே வளர வேண்டும் என்ற சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள்; மற்றவர்களது யோசனையை நாடமாட்டார்கள்.

ஆனால் தேவனுடைய பிள்ளை, ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு கிரியையிலும் ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுடைய அங்கீகாரத்தை பெறும் சலுகையை உணர வேண்டும். நாம் செய்கிறது தேவனுடைய வேலை, நம்முடைய வேலை அல்ல. இன்றைக்கு அதை ஒருவழியில் பண்ணுகிறபடியால் அதே விதமாகவே எப்பொழுதும் பண்ண வேண்டும் என்ற அவசியமில்லை. சில காரியங்கள் மலைகளைப் போல நிரந்தரமாக இருக்கக்கூடியது, மற்றவைகள் அல்ல. நமது அனுபவத்தைப் பொருத்து இருக்கிறது. கர்த்தர் இன்றைக்கு ஒரு அனுபவத்தையும் நாளைக்கு ஒரு அனுபவத்தையும் கொடுக்கலாம். இன்றைக்கு அவர் நம்மை அமர்ந்த தண்ணீரிலும் புல்லுள்ள இடங்களிலும் வழி நடத்தலாம். நாளை அது முள்ளுள்ள மற்றும் கரடுமுரடான இடமாக இருக்கலாம். இப்படியாக ஒவ்வொரு நாளும் நாம் அறிவிலும் அன்பிலும் வளருகிறோம். நமக்கு எந்தவித அனுபவம் வந்தாலும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

"திரளாக நான் எதைக்கண்டாலும் திருப்தி அடைகிறேன். ஏனெனில் தேவனுடைய கரமே என்னை வழிநடத்துகிறது."

**R5312**

## THE DISTINCTION BETWEEN FLESH AND SPIRIT

# மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையேயான வித்தியாசம்

''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது.'' - மத்தேயு 26:41

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும் நேரம் நெருங்கி வந்தபோது, அவரது பூமிக்குரிய ஊழியம் முடிவடையும் சமயத்தில் இந்த வார்த்தைகளை அவர் தமது சீஷர்களிடம் கூறினார். இந்த சோதனை மிக சமீபமாயிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். இந்த காரியங்களை தமது சீஷர்களிடம் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். ஆனால் வெளியரங்கமான காரியங்கள் இதற்கு எதிராக இருந்ததால் அவரது வார்த்தைகளை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவர் அடிக்கடி உவமைகளாகவும் கருகலான வார்த்தைகளாலும் பேசினார். (அவரது கூற்றுகளில் அநேக பாடங்களை பெற்றாலும் இவைகளை அவரது உயிர்த்தெழுதல் வரை அவர்கள் முழுவதுமாக புரிந்து கொள்ளவில்லை) ஆகையால் அவர் சிலுவையில் அறையப்படுவார் என்று சொன்ன பொழுது, ''நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்கு ஜீவனில்லை'' என்று கூறினதை போல, அது வேறொரு கருகலான, மறைபொருளான காரியம் என்று நினைத்தார்கள்.

அவர்கள் இந்த காரியங்களை புரிந்து கொள்ளவில்லை. ரோம அரசாங்கம் அவரை சிலுவையில் அறைவதற்கான எந்தவித ரூபகாரத்தையும் அவர்கள் காணவில்லை. மேலும் அவர்களது சொந்த தேசம் அவரை சிலுவையில் அறைய அதிகாரம் கிடையாது என்பதை அறிந்திருந்தார்கள். பரிசேயரும் வேதபாரகர்களும் அவர் மேல் கோபமாயிருந்தார்கள் என்பதை அறிந்திருந்தார்கள். ஆனால், ''ஓசன்னா'' என்று அவரை ஒரு ராஜாவைப் போன்று ஆர்ப்பரித்ததை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள்.

சீஷர்கள் ராஜ்யத்தைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அதில் யார் பெரியவனாயிருப்பான் என்று வாக்குவாதம் உண்டாயிற்று. அவர்களில் இரண்டு பேர் அவருக்கு அருகே இடமளிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். நெருங்கி வருகிற காரியங்களைக் குறித்து அவர்களது மனம் மிகவும் தூரமாயிருந்தது என்பது இதன் மூலம் தெளிவாயிருந்தது. கடைசியாக உங்களில் ஒருவன் என்னை காட்டி கொடுப்பான் என்று சொன்ன போது ''அது நானோ?'' என்று ஒருவருக்குப்பின் ஒருவராக கேட்டார்கள். கடைசியாக பரிசுத்த பேதுரு கூறியதாவது: ''உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் ஒருக்காலும் இடறலடையேன்.'' ஆனால் இயேசு கூறியதாவது: ''இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்.''

சமீபத்தில் நடக்கும் காரியங்களை கர்த்தர் அறிந்திருந்தும், அவர்கள் அதை அறியாததால், அவர் விநோதமான காரியங்களை நடப்பித்தார் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆகையால் அந்த இரவில், தோட்டத்தில் அவர் கூறியதாவது : ''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.'' அவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்துகிறார். ஏனெனில் சோதனை காலங்கள் சமீபமாயிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் ஒளியின் அதிபதியாகிய கிறிஸ்துவுக்கும், இருளின் அதிபதியாகிய சாத்தானுக்கும் போர் நடந்துக்கொண்டிருந்தது என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள்.

நாம் செல்கிற வழியில் அவர்கள் இதை புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியின் அறிவொளியை இன்னும் பெறாதிருந்தார்கள். சோதனைகள் இருந்தன என்பதையும், அதிலிருந்து தங்களை தாங்களே பாதுகாத்துக்கொள்ள அவர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதையுமே அதிகமாக அறிந்திருந்தார்கள். மேலும் ஆவிக்காக சோம்பேறித்தனமாகவோ அற்பமாகவோ ஆர்வமாக இருந்தார்கள். இல்லையென்றால் சில வகையான சோதனைக்குள் விழ வேண்டியிருக்கும் என்பதையும் அறிந்திருந்தார்கள். அவர்கள் விழித்திருக்கிறது மாத்திரமல்ல, ஜெபிக்கவும் வேண்டியாவர்களாயிருந்தார்கள். ஜெபமானது அவர்கள் விழித்திருக்கிறார்கள் என்பதை குறிக்கும். அவர்கள் விழித்திருப்பது மட்டும் போதாது, அதோடு கூட தெய்வீக உதவியும் தேவை. எதற்காக ஜெபிக்கிறார்களோ அதற்காக முயற்சிக்கவும் வேண்டும். ஜெபத்தில் ஆர்வமாக இருப்பது விழித்திருப்பதற்கு உதவி செய்யும்

அவர்கள் விழித்திருக்க வேண்டியது, நமது கர்த்தர் காட்டிக் கொடுக்கப்படுதல், சோதனை மற்றும் சிலுவையிலறைப்படுதலுக்கு மாத்திரமல்ல. அதற்கு பின் வருகிற நாட்களின் அனுபவங்களுக்கும், சீஷர்கள் அறையின் கதவுகளை மூடிக்கொண்டிருந்த போது, இயேசு அவர்கள் நடுவே தோன்றி. தான் மரித்தோரிலிருந்து எழுந்ததாக அவர்களுக்கு விவரிக்கும் நிகழ்வுகளுக்கும் அவர்கள் விழித்திருக்க வேண்டியிருந்தது. பல்வேறு வழிகளில் அவர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் விழித்திருக்கும் மனோபாவத்திலும், தேவனுடைய சித்தத்தை அவர்கள் அறிய உதவும் பரலோக ஞானத்திற்காக ஜெபிக்கும் மனோபாவத்தையும் உடையவர்களாக இருந்தால், அது அவர்களுக்கு பெரும் ஆசீர்வாதமாக இருக்கும், கர்த்தரும் இதை அறிவார். அந்த சோதனை நாட்களில் அவர்களுக்கு உதவி தேவை என்பதை அவர் அறிவார். அவர்கள் பலமுள்ள விசுவாசம் உள்ளவர்களாக இல்லாதிருந்தால். அடுத்த சில நாட்களில் நடக்கும் நிகழ்வுகள் அவர்களையும் கிறிஸ்துவின் போதனைகளில் அவர்களது விசுவாசத்தையும் வெற்றிக்கொள்ளச் செய்யும். ஆனால் அவர்கள் அந்த காலத்தின் விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சையில் வைக்கப்பட்டார்கள். இயேசு அவர்களுக்காக ஜெபித்தார். அவர்கள் ஜெயங்கொண்டவர்களாக வந்தார்கள். ஆனால் சிலர், பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த தோமா பயத்துடன் வந்தார்கள்.

## சோதனையின் விசேஷித்த காலம்

இந்த பாடம் விழித்திருத்தல் மற்றும் ஜெபித்தலுக்கு நமக்கு பொருந்தக்கூடியது. நாம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சாதகமான காலத்தில் வாழ்கிறோம். அதில் தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மற்றும் வழி காட்டுதலின் அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் நமது விழித்திருத்தலும் ஜெபமும், நமது கர்த்தரின் காலத்தின் சீஷர்களைக் காட்டிலும் அதிக ஊக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அப்பொழுது ஒரு விசேஷித்த சோதனை காலத்திற்குள் நுழைந்தது போல, நாம் இந்த யுகத்தின் முடிவில் ஒரு விசேஷித்த சோதனை காலத்திற்குள் வாழ்கிறோம். இந்த சோதனை நாம் கிறிஸ்துவின் பள்ளியில் ஒரு புது சிருஷ்டியாக கற்றுக் கொண்டவைகளாகிய தயவு, சாந்தம், சகோதர அன்பு மற்றும் அன்பின் அடிப்படையில் இருக்கும். இருதயத்தை பொருத்த வகையில் இதில் நாம் குறைவுள்ளவர்களாகக் காணப்பட்டால், ராஜ்ய வகுப்பாராக இருப்பதற்கு பாத்திரராக எண்ணப்பட மாட்டோம். ஆகையால் பாத்திரராக காணப்பட்டவர்களிலிருந்து நாம் பிரிக்கப்படுவோம்.

கர்த்தர் சோதனைகளை பெற்றிருந்தார், அவரது அனைத்து சீஷர்களும் கூட சோதனைகளை பெற்றிருக்க வேண்டும். சோதனையை பெற்று, அதை எதிர்த்தோமானால் கிறிஸ்துவின் குணலட்சண சாயலை அபிவிருத்தி அடைவதில் விசேஷித்த ஆசீர்வாதத்தை கொண்டு வரும் என்று அப்போஸ்தலர் யாக்கோபு நமக்கு உறுதியளிக்கிறார். விழித்திருத்தலும் ஜெபித்தலும் நமக்கு சோதனைகளை கொண்டு வராது என்று கர்த்தர் கூறாமல் இந்த சோதனைகளில் நாம் தோல்வியடைய மாட்டோம் என்று கூறுகிறார். பரிசுத்த பேதுருவைப் போல் நாம் சிக்கிக் கொள்ளலாம். ஆனால் அவர் அழுது மன்னிப்புக் கேட்டார். அவரது ஜெபம் எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை நாம் அறியோம். ஆனால் தனது ஆண்டவரை மறுதலித்ததற்காக நெஞ்சார முழுமையாக வருந்தியிருப்பார்.

“ஆவியோ உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ, பலவீனமுள்ளது.” இது நமக்கும் பொருந்தும் என்று பொருள் கொள்ளக்கூடாது. அந்த சமயத்தில் சீஷர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகவில்லை. அவர்கள் பெந்தெகொஸ்தே நாள் வரை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படவில்லை. அது அந்த காலத்தை விட தற்போது அதிக அர்த்தத்தை கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அது அவர்கள் ஆவியில், சிந்தையில், நோக்கத்தில் உற்சாகம் உள்ளவர்களாயிருந்ததை அர்த்தப்படுத்தியது. இந்த நோக்கங்கள் நல்லதாக இருக்க வேண்டியிருந்தது. அவர்கள் தங்களை “உத்தம இஸ்ரயேலர்களாக” விளங்கப்பண்ண வேண்டியவர்களாக இருந்தார்கள். மனிதன் பாவத்தில் விழுந்து பல ஆயிரம் வருடங்கள் ஆனதினால் வந்த சீரழிவு மற்றும் பலவீனம் அவர்களுக்கு வந்திருந்தாலும் அவர்கள் பாசாங்கு செய்யாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் செயல்படுவதற்கு மேலாக அவர்களது நோக்கம் இருந்தது. அதனிமித்தமாக அவர்கள் விசேஷமாக விழித்திருந்து ஜெபிப்பது அவசியமாயிருந்தது.

## போராட்டத்தின் தன்மை

சபையின் காரியங்கள் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தற்காலம் வரை அதே போல இருப்பது உண்மை. எனினும் மாம்சத்திற்கும் ஆவிக்கும் ஒரு விசேஷித்த வேறுபாடு இருப்பதை நாம் கவனிக்கிறோம். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புது சிருஷ்டிக்கு பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17) புது சிருஷ்டி ஒரு வகையில் பலவீனமுள்ளதாகவும் இன்னொரு வகையில் பலமுள்ளதாகவும் இருக்கிறது. புது சிருஷ்டியானது, பாவம் அல்லது அநீதி அல்லது தூஷணம் ஆகியவற்றிற்கு அனுதாபம் காட்டாதிருப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

புது சிருஷ்டி தேவனுடைய வல்லமையை குறிப்பிடுகிறது. சொல்லப்போனால் அது நம்மிடம் அடையாளம் காணப்பட்டிருந்தது. தேவனுடைய சித்தத்தை நமது சித்தமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியினால் நாம் புதிய ஜீவனுக்கு ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் இந்த ஜெனிப்பித்தலினால் நாம் புது சிருஷ்டி என அழைக்கப்படுகிறோம். புது சிருஷ்டிகளாக நாம் முதலில் குழந்தைகளாக குறிப்பிடப்படுகிறோம். புது சிருஷ்டிக்கும் பழைய சிருஷ்டிக்கும் வித்தியாசம் என்னவென்றால், புது சிருஷ்டியானது கனம், மகிமை மற்றும் சாகாமையாகிய தெய்வீக சுபாவத்தை அடைய எதிர்பார்க்கிறது. பழைய சிருஷ்யானது, மனிதர்களில் கனம் முதலானவைகளாகிய பூமிக்குரிய காரியங்கள் மற்றும் தற்கால வாழ்வின் சுகங்களை விரும்புகிறது. அது எதை விரும்புகிறதோ, ஏங்குகிறதோ அதை நோக்கி தொடர்ந்து இழுக்கப்படுகிறது.

புது சிருஷ்டி, பழைய சிருஷ்டியையும், அதன் விருப்பங்களையும் வெற்றி கொள்ள வேண்டும். இது புது சிருஷ்டியின் பலியின் உடன்படிக்கையின் அலுவல்களில் குறுக்கிடுகிறது. இப்படியாக புதுசிருஷ்டிக்கும் பழைய சிருஷ்டிக்கும் வேறுபாடு காணப்படுகிறது. முதலாவது குழந்தையாக உணருகிற புது சிருஷ்டியானது கிருபையிலும்,கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும், அவரது எல்லா காரியங்களிலும் வளர வேண்டும். இப்படியாக புது சிருஷ்டியானது படிப்படியாக பலம் மேல் பலமடைகிறது.

ஆனால் ஐயோ! இங்கே அடிக்கடி துன்பம் வருகிறது. கர்த்தரின் ஜனங்கள் அநேகருக்கு பலமுள்ள ஆகாரம் கொடுக்கப்படுவதில்லை. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர் –களானீர்கள்.” (எபிரேயர் 5:12) இவர்களில் அநேகர் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன என்பதை அறியாதிருக்கிறார்கள். அநேகர் அர்ப்பணித்தல் அல்லது பரிசுத்தமாகுதல் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளாதிருக்கிறார்கள்.

அவர்கள் தாங்கள் வெறும் குழந்தைகள் என்பதை புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள். அவர்கள் முதல்படியை மட்டுமே எடுத்திருக்கிறார்கள். இந்த ஆழ்ந்த காரியங்களை

அவர்கள் அறிய வேண்டியதில்லை. இதை அவர்களது மூப்பர்கள் மற்றும் பாஸ்டர்கள் மட்டுமே அறிய வேண்டும், சிந்திக்க வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லுகிற ஊழியர்கள், குருமார்கள், பிஷப்புகளின் வார்த்தைகளை நம்பக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. இந்த நிலைமை தேவனுடைய வார்த்தைகளுக்கு முற்றிலும் எதிர்மாறானது. அவர் தம்முடைய பிள்ளைகள் அனைவரும் தம்முடைய வார்த்தைகளை சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது சொல்லும்படியாக தகுதியுள்ளவர்களாக ஆக வேண்டும் என்று விரும்புகிறார். ஆகையால் அப்போஸ்தலர் கூறுகிற புத்திமதியாவது: "நாம் இனி போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிற குழந்தைகள் அல்ல." ஆனால் நாம் கர்த்தருக்குள் புது சிருஷ்டியாகி, தெய்வீக வாக்குத்தத்தங்களினால் நாம் அழைக்கப்பட்டிருக்கிற மகிமையான காரியங்களுக்கு இப்படியாக தயாராகிறோம். (எபேசியார் 4:14,15)

மாம்சமானது பலவீனமுள்ளதாக இருக்கிறது. அது நீதியின் திட்ட அளவு வரை இல்லை. தகப்பனாகிய ஆதாம் பூரணராயிருந்தார். அவரது மாம்சீக சிந்தை பூரணமாயிருந்தது, நீதியில் பலமுள்ளதாயிருந்தது. நமது இனத்தை, மனதிலும் சன்மார்க்கத்திலும், சரீர பிரகாரமாகவும் கீழே கொண்டு சென்று, இந்த மாம்சம் படிப்படியாக பலவீனத்தின் மேல் பலவீனமடைந்தது. ஆகையால் சகல மாம்சமும் அதன் இயற்கையான சுபாவத்தில் விழுந்துபோன நிலையில் பலவீனமாக இருக்கிறது. நாம் இந்த போக்குகளை ஜெயங்கொள்ளும் புது சிருஷ்டியாக பலமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால் மாம்சமானது புது சிருஷ்டியின் ஊழியனாக வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் புது சிருஷ்டியானது முடிவாக ஆண்டவரின் குணலட்சணத்திற்கு ஒப்பாக அபிவிருத்தி அடையும்.

ஆனால் ஜனங்கள் கூறுவதாவது: "ஜான் நல்ல ஒரு வணிகராக ஆக்கப்பட வேண்டும். ஆனால் அவனால் மதத்தை தவிர வேறு எதையும் பேசவோ, நினைக்கவோ முடியாது." அல்லது சமூக அமைப்பில் அவர்கள் கூறுவதாவது: "அந்த சீமாட்டி ஒரு காலத்தில் மிகவும் வசீகரமானவராக இருந்தாள். ஆனால் இப்பொழுது அவளால் மதத்தைப் பற்றி மட்டுமே பேச முடியும்." இயேசுவின் அடிச்சுவட்டில் உண்மையுடன் நடந்து, கர்த்தருடனான நமது உடன்படிக்கையின் உறுதி மொழிகளை நிறைவேற்றுகிற உண்மையான மனிதராகவும் உண்மையான பெண்களாகவும் நாம் இருந்தால், அதெல்லாம் உலகத்தைக் குறித்த காரியமாகவே இருக்கும்.

எனினும் இரு மனமுள்ளவர்கள் மீது எல்லோரும் திருப்தியற்றவர்களாகவே இருக்கிறார்கள். "இரு மனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாக இருக்கிறான்." நாம் கிறிஸ்துவின் சீஷர்களாவதற்கு முன்பு நாம் உட்கார்ந்து, செல்லும் செலவை, தேவனுக்கு ஊழியம் செய்யும் செலவை கணக்குப் பார்க்க வேண்டும் என்று இயேசு நமக்கு கூறுகிறார். நாம் அப்படிச் செய்து சரியான தீர்மானத்தை எடுத்து, அதற்கிசைவாக தொடர்ந்து ஊழியம் செய்தால், எதிர்காலத்தில் கனம் மற்றும் மகிமையுடன் தெய்வீக கிருபையையும் நித்திய ஜீவனையும் பெறுவதோடு நாம், கர்த்தரின் கிருபையாகிய தற்கால பரிசையும் பெறுவோம்.

### வெதுவெதுப்பாயிருப்பது விரும்பத்தக்கது அல்ல

செல்லும் செலவை கணக்குப் பார்த்த பிறகு நீ உலகப் பொருளுக்கும் சுயநலத்துக்கும் ஊழியம் செய்ய தீர்மானித்து கோடீஸ்வரனாக முயற்சித்தால், நீ அரசியலில் நுழைய விரும்பி, ஜனாதிபதியாக விரும்பினால், நீ சமூக வாழ்க்கையில் நுழைந்து உன் முழு சக்தியுடன் அதற்குள் சென்றால், ஒரு அபத்தமான மனிதனாக இருந்து, தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாதிருந்து, எதையும் சரியாக நிறைவேற்ற முடியாது. அவன் குளிராகவோ, அனலாகவோ இல்லாத மனிதனைப் போல் இருக்கிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பரலோக பிதாவின் ஊழியர்களாக நாம் தீர்மானித்து விட்டால், நாம் வேறு எந்த எஜமானனையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இது தலைமைத்துவத்தை அங்கீகரிக்கக் கூடாது என்று பொருளல்ல. சிலர் நமது பெரும்பலான நேரத்தின் தலைவர்களாக இருக்கலாம். ஆனால் நமது நேரத்தை அதிகமாக கட்டுப்படுத்துகிறவர், நம் இருதயத்தின் தலைவர் அல்ல, அதை கர்த்தருக்குக் கொடுத்திருக்கிறோம். நமது நேரத்தையும், சக்தியையும் பலத்தையும் மாபெரும் ராஜாவின் ஊழியத்தில் பயன்படுத்த நாட வேண்டும்.

நமது நேரத்தின் குறிப்பிட்ட பகுதி நமது மாம்சீக தேவைகளுக்கும் நம்மை நம்பியிருக்கிறவர்களின் தேவைக்கும் அவசியமாயிருக்கிறது. இப்படி நமது சொந்த காரியத்தில் அக்கறை காட்டும் போது, மகா தேவனிடத்தில் நமது விசுவாசத்தை இழப்பதில்லை. ஏனெனில் பரலோக பிதாவின் ஊழியத்திற்கு எதிராக இருக்கக்கூடிய பூமிக்குரிய தலைவருக்கு ஊழியனாக ஆகிறதை நாம் மறுக்க வேண்டும். இது கிறிஸ்துவின் சபையின் கருத்துகளுக்கு குறுக்கீடு செய்யாது. அங்கே பல்வேறு ஊழியங்களும், செயல்பாடுகளும், ஒவ்வொரு துறையில், அதன் சொந்த அமைப்பும் தலைவரும் இருப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் சரீரமானது, இயேசுவை எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கும்படியாக அங்கீகரிக்க கிரியை நடப்பித்து, சரீரத்தின் சகல வேலைகளிலும் தனது பங்கு என்ன என்பதை அறிய நாட வேண்டும்.

நாம் வாசிக்கிறதாவது: "கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு ஆண்டவராயிருக்கிறார்." "இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது" என்கிற இந்த வசனத்தில் கிறிஸ்து குறிப்பிடப்படவில்லை. இவர்கள் தேவனும் உலகப்பொருளும் ஆகும். இயேசு கூறினதாவது: "தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய விரும்புகிறேன். என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பின பிதாவின் சித்தத்தின்படி செய்யவே நான் வந்தேன்." ஆகையால் இயேசுவை நமது ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஊழியம் செய்வதினால், நாம் பிதாவானவரை புறக்கணிப்பதில்லை. பூமிக்குரிய எஜமானனை நாம் ஏற்றுக்கொள்ளுவதால் நாம் பிதாவையோ அல்லது குமாரனையோ புறக்கணிப்பதில்லை. பூமிக்குரிய எஜமானனுக்கு நாம் ஊழியம் செய்வது, நமது பரலோக பிதாவுக்கும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் செய்யும் ஊழியத்திற்கு எதிரானது என்று நாம் நினைக்கக் கூடாது. நாம் எல்லா மனுஷருக்கும் முன்பாகவும் யோக்கியமானவைகளையும் நேர்மையானவைகளையும் செய்ய நாட வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 12:17)

R5313

## THE REPORT OF THE SPIES

# வேவுக்காரர்களின் அறிக்கை

எண்ணாகமம் 13:1-3, 17 முதல் 14:25

"தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" - ரோமர் 8:31

எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களின் முதல் பிரயாணம் சீனாய் மலை வரை இருந்தது. அங்கே ஒரு வருடம் தங்கியிருந்தார்கள். இரண்டாவது பிரயாணம் எழுபது மூப்பர்களை நியமித்த பிறகும், மிரியாம் பாளையத்திற்குள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகும் ஆரம்பித்தது. அவர்களது புறப்பாடு சடங்குகளோடு கூடியதாக இருந்தது. அதாவது வெள்ளி பூரிகைகளை ஊதி, மேக ஸ்தம்பம் மற்றும் அக்கினி ஸ்தம்பம் வழி நடத்த மோசேயின் ஜெபத்துடன் புறப்பாடு இருந்தது. "கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மை பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக" என்பதே மோசேயின் ஜெபம். இது இஸ்ரயேலரின் காலை அழைப்பாக இருந்தது. இரவில் சேனைகள் தங்கும் போது மோசேயின் ஜெபமாவது: "கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரயேலரிடத்தில் திரும்புவீராக." வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், "எங்களோடு இருப்பீராக" என்பதாகும்.

அவர்களது பிரயாணம் வறண்ட வனாந்தரத்தில், சூரிய வெப்பத்தில் அவர்கள் தங்கியிருந்த சீனாய் பள்ளத்தாக்கிலிருந்து முற்றிலும் வேறானதாக இருந்தது. கானான் தேசத்திலிருந்து அவர்கள் பிரயாணப்பட்ட காதேஸ் பர்னேயா நூற்றி அறுபது மைல் தூரத்தில் இருந்தது. அது அறியாத ஆபத்துகளாகிய, சர்ப்பங்கள், திரிகிற அரேபிய கூட்டங்கள், தண்ணீர் பற்றாக்குறை முதலானவைகளால் சூழப்பட்டிருந்தது. பெண்கள், குழந்தைகள், வீட்டுப் பொருட்கள், கால்நடைகள் முதலியவைகளும் இஸ்ரயேலரின் பிரயாணம் மெதுவாக இருக்க வேண்டியிருந்தது. அவர்களது ஓரிரு மாதம் பிராயணத்திற்கு பிறகு திராட்சைப் பழம் முதல் - அறுப்புக்காலத்தில் ஜுலை மாதம் வந்து சேர்ந்தார்கள்.

காதேஸ் பர்னேயா, அவர்களது குறிக்கோளான இடம், ஒரு நல்ல இடமாக, நீர் நிறைந்த இடமாக, பாரான் வனாந்தரத்திற்கு முற்றிலும் வேறானதாக இருந்தது. இங்கே அவர்கள் தங்கி ஓய்வெடுத்தார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின், அவர்களுக்கு வடக்கே இருக்கிற பர்வதத்தை பார்த்தார்கள். ஏனெனில் அவர்கள் தெற்கு எல்லையில் இருந்தார்கள்.

### இஸ்ரயேலர்களின் பயம்

மோசே முழு விசுவாசத்துடன், அவர்கள் உடனே புறப்பட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு போக வேண்டும் என்று தீர்மானித்தார். தேவன் பல வழிகளில் தமது கிருபையை அவர்களிடத்தில் முன்னரே வெளிப்படுத்தியிருந்தார். அதாவது அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி வந்ததில், சிவந்த சமுத்திரத்தை கடந்ததில், மாராவின் தண்ணீரை இனிப்பாக்கியதில், எதிரிகளாகிய அமலேக்கியவர்களை வெற்றி கொண்டதில், மன்னாவை அனுப்பியதில், பிறகு காடைகளை அனுப்பியதில் தமது கிருபையை வெளிப்படுத்தினார். ஆசாரிப்பு கூடாரத்திலும், பகலில் மேகஸ்தம்பத்திலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் தமது பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆனால் இஸ்ரயேலர் பயமடைந்தார்கள். சீனாய் மலையின் அருகே அமலேக்கியர்களிடம் போரிட்டதைத் தவிர வேறு எந்த போர் அறிவும் பெற்றிராதவர்கள். அமலேக்கியருடன் நடந்த போரில் இஸ்ரயேலருக்கு ஜெயங்கொடுக்கும்படி, மோசேயின் கையை உயர்த்தி தேவனை நோக்கி ஜெபிக்கும்வரை அவர்களது நிலைமை மோசமாக இருந்தது. அவர்களது ஜாக்கிரதை அவர்களது விசுவாசத்தை சமநிலைப்படுத்தியது. பன்னிரண்டு வேவுக்காரரை அனுப்புவதற்கு மோசேயை அவர்கள் துரிதப்படுத்தினார்கள். இவர்கள் யோசுவா, காலேப் என்ற இரு தலைவர்கள் கீழாக பிரிந்து சென்றனர். ஒரு பிரிவினர் முழு தேசத்திற்கும் சென்று நாற்பது நாளில் திரும்பினர். இன்னொரு பிரிவினர் கொஞ்ச தேசத்தைப் பார்த்துவிட்டு சீக்கிரம் திரும்பினர். வேவுக்காரர்கள் எச்சரிக்கையுள்ளவர்களாயிருந்து, அதன் பட்டணங்களின் சுவர்கள் மிகவும் உயரமாக இருக்கின்றன. நவீன இராணுவ தளவாடங்கள் இல்லாமல் அவர்களை மேற்கொள்ளுவது கடினம் என்று அந்த தேசத்தைக்குறித்து உண்மையான அறிக்கையை கொடுத்தார்கள். மேலும் அவர்கள், தாவீது ஜெயங்கொண்ட கோலியாத்தின் மூதாதையர்களான இராட்சதர்களை கண்டதாகவும் அறிவித்தார்கள். இந்த பத்து பேர்களின் அறிக்கை துர்அறிக்கையாக சொல்லப்பட்டது. ஏனெனில் அது கஷ்டத்தின் நோக்கத்தோடு சமர்பிக்கப்பட்டது. இது உற்சாகம் அளிக்கக்கூடிய, நல்ல அறிக்கை என்று கருதப்பட்ட யோசுவா மற்றும் காலேபின் அறிக்கைக்கு மாறானதாக

இருந்தது. இந்த அறிக்கைகளும் தேசத்தின் செழுமையை, அதன் பழங்கள், தேன் முதலானவைகளை தெரிவித்தன. யோசுவா மற்றும் காலேபின் அறிக்கை விசுவாசத்தின்படி ஆதரிக்கப்பட்டதாக இருந்தது. பாதகமான அறிக்கை பயத்தினாலும் தேவனுடைய கிருபையையும் வழி நடத்துதல்களையும் மறந்ததாக இருந்தது.

வேவுக்காரர்கள் தங்களை ஒரு குழுவாக எண்ணிக்கொண்டு அங்கு நுழைய முடியுமா, முடியாதா என்பது பற்றி இல்லாமல் அதற்குள் எப்படி நுழைவது என்பது பற்றியே இருந்திருக்க வேண்டும். நுழைவது சாத்தியம் என்பது முன்னமே தேவனுடைய வாக்குத்தத்தத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இவைகளை யோசுவாவும் காலேபும் தங்கள் அறிக்கையில் விட்டிருந்தார்கள். தேவன் அவர்களை எகிப்தியர்களிடமிருந்தும் அமலேக்கியர்களிடமிருந்தும் விடுவிக்க கூடுமானால், வனாந்தரத்தில் தண்ணீரும் வனாந்தரத்திலிருந்து மன்னாவும் அவரால் கொடுக்கக் கூடுமானால், கானானுக்குள் அவர்களை கொண்டு வருவேன் என்ற அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தேவையான சகலத்தையும் நிச்சயமாக அவர் செய்வார்.

### ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடம்

நிழலான ஜனங்களின் அனுபவங்களிலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் பல்வேறு பாடங்களை பெறக்கூடும். நாம் இந்த காரியத்தை தனிப்பட்ட நிலைப்பாட்டில் கவனித்தோமானால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கானானின் இளைப்பாறுதலில் நுழைவதற்கும் கர்த்தரால் வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ளவும் ஒரு விசேஷித்த அழைப்பை தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் காண்போம். பார்வோன் மற்றும் எகிப்தியர்களால் நிழலாக காண்பிக்கப்பட்ட சாத்தானுக்கும் உலகத்திற்கும் அவன் தன் முதுகை திருப்புகிறான். விசுவாசத்தினால் அவன் தனக்கும் சத்துருவுக்கும் இடையே நீதிக்காகவும் தேவனுக்கு கீழ்ப்படிதலுக்கும் ஒரு திடமான தீர்மானத்தை வைக்கிறான். தேவனுடைய கிருபையான வழிநடத்துதல்களால் உடன்படிக்கை செய்யும் இடத்தை அடைகிறான்.

அப்பொழுதிலிருந்து புது சிருஷ்டியாக அவனது பிரயாணங்கள், வனாந்தர பிரயாணம், சோதனைகளால் சூழப்பட்டு, ஒரு முன்னேறிய சிலுவைப் போர் வீரனின் நிலைமைக்கு வரும் வரை தொடர்கிறது. அங்கே அவன் புதிய வாழ்வை, புதிய அனுபவத்தை, தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக உணருகிறான். உடனே அவன் தைரியத்துடனும் விசுவாசத்துடனும் உள்ளே நுழைந்து ஆவிக்குரிய சகல நல்ல காரியங்களையும் சொந்தமாக்கிக் கொள்ளுகிறான்.

தேசத்தின் சத்துருக்கள் மாம்சீக பலவீனத்தையும் விழுந்து போன சுபாவத்தின் எதிர்ப்புகளையும் குறிக்கும். இவைகளெல்லாம் ஜெயங்கொள்ளப்பட வேண்டும். இவைகளை ஜெயங்கொள்ளுகிறதற்குத்தக்கதாக, அவன் நுழைந்து கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவனது சுதந்தரத்தை அனுபவித்து சொந்தமாக்கிக் கொள்ளுகிறான். சிலர் விசுவாசத்தினால் இதை சரியான காலத்தில் செய்கிறார்கள். மற்றவர்கள் சோதனைகளை ஆராய்கிறார்கள், ஐயோ! அடிக்கடி உற்சாகம் குறைந்தவர்களாகிறார்கள், பயமும், அவநம்பிக்கையும் முறுமுறுப்பும் அடைகிறார்கள். சில சமயம் அவர்கள் உலகத்தை விட்டே வெளியேறாமல், அவ்விடத்திற்கு திரும்பக் கூடும்.

வேவுக்காரர்களின் அறிக்கை, தேவனுடைய வாக்குத்தத்தத்தை பார்க்கக்கூடிய பல்வேறு கோணத்தை குறிப்பிடுகிறது. விசுவாசக் கண்களுக்கு எல்லாம் சாத்தியமானதாக இருக்கிறது. அவிசுவாச கண்களுக்கு, மாம்சத்தை ஜெயம் கொள்ளுவது இயலாததாக இருக்கிறது. நாம் முன்னேறி தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுவோமாக! நாம் நல்ல தைரியம் உள்ளவர்களாக இருந்து, நல்ல போராட்டத்தையும் போராடுவோமாக! விசுவாசத்தை சரியானபடி அப்பியாசப்படுத்தினால், தேவன் நம்மோடு கூட இருந்து, நமக்கு வெற்றியைத் தருவார்!

### தேவன் போரை ஊக்குவிக்கிறாரா?

இந்த பாடத்தை படிக்கையில், பிற ஜனங்களால் சொந்தமாக்கப்பட்டிருந்த தேசத்தை இஸ்ரயேலர்கள் கைப்பற்ற போர்தொடுத்தார்கள் என்பதையும், இந்த படையெடுப்பு இஸ்ரயேலரில் அநேக உயிர்களையும், கானான் தேசத்தினர் பலரது உயிர்களையும் அழிக்கும் என்பதை நினைவுகூர்ந்து, அநேகர் குழப்பமடைவார்கள். தேவன் இப்படிப்பட்ட செய்தியை மோசேக்கும் இஸ்ரயேலருக்கும் கொடுத்தார் என்பது நம்பப்படுவதற்கு சரியானதாக காணப்படவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இயேசு சமாதானப்பிரபு என்றும், தேவன், பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுவதற்கு இது எதிரானதாக இருக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவைகள் எப்படி சமரசப்படுத்தப்படுகிறது என்று அஞ்ஞானவாதிகள் கேட்கிறார்கள். இஸ்ரயேலர்கள் கானானியரின் தேசத்தை திருடுவதில், அவர்களை கொல்லுவதில் நீதி எங்கே கட்டளையிடப்படுகிறது? சில வேதவாக்கியங்களின்படி தேசத்தின் சகல ஜனங்களும் கானானியர், ஏத்தியர், பெர்சியர், எபூசியர் முதலான சகலரும் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும்.

வேதாகமத்தை புரிந்து கொள்ளுவதற்கு, இதை நாம், இருண்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நமது விசுவாச கோட்பாடுகளின் நிலைப்பாட்டின்படியோ நமது சொந்த

அபூரணமான அறிவின் நிலைப்பாட்டின்படியோ பாராமல் வேதாகமத்தின் நிலைப்பாட்டின்படி நாம் நோக்க வேண்டும். வேதாகமத்தை அதன் சொந்த வெளிச்சத்தில் பார்த்தால் மட்டுமே, வேதாகமமானது சீரானதாக, அழகானதாக தெய்வீகமானதாக இருக்கிறது.

முதலாவது வேதாகமமானது நமது விசுவாச கொள்கைகளை எதிர்க்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இந்த விசுவாச கொள்கையானது கொல்லப்பட்ட கானானியர்கள் அனைவரும் நேராக நித்திய ஆக்கினைக்கு சென்று, இன்னும் அங்கே வேதனைப்படுகிறார்கள் என்று கூறுகிறது; ஏனெனில், அவர்கள் உண்மையான தேவனையும், அவரால் இரட்சகராக அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவையும் அறியாதிருந்தார்கள் என்று கூறுகிறது. அந்த ஜனங்களும் உலகத்தின் சகல ஜனங்களும் ஆதாமின் பிள்ளைகள் என்றும் அனைவரும் மரண தீர்ப்பினால் அழிகிறார்கள் என்றும் வேதாகமம் நமக்கு கூறுகிறது. அவர்கள் மரித்த போது அவர்கள் எங்கேயும் உயிருடன் இல்லை. அவர்கள் மரித்திருக்கிறார்கள், அவர்கள் கொள்ளை நோயினாலோ அல்லது பஞ்சத்தினாலோ அல்லது ஷயரோகத்தினாலோ அல்லது நிமோனியாவிலினாலோ மரித்தாலும் எல்லாம் ஒன்று தான். நீ சாகவே சாவாய் என்று தேவன் தீர்ப்பளித்த தண்டனையின்படி அவர்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். (ஆதியாகமம் 2:17 மார்ஜின் காண்க)

ஆகையால் எந்த வழியில் நாம் மரிக்கிறோம் அல்லது நமது அனுபவங்கள் அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்பது முக்கியமில்லை. அமலேக்கியர் மற்றும் கானானின் மற்ற ஜனங்களின் அக்கிரமம் நிறைவுக்கு வந்ததாக தேவன் அறிவித்தார். சொல்லப்போனால் அவர்கள் நீண்ட நாள் வாழ்வதால் அவர்களுக்கும் பிரயோஜனமில்லை, மற்றவர்களுக்கும் பிரயோஜனமில்லை என்று தேவ நீதி தீர்மானித்தது, அவர்கள் பூமியில் வெறும் கணக்கில் இருப்பார்கள்.

வருகிற ஆசீர்வாதங்களுக்கு நிழலாகவும் முன் மாதிரியாகவும் இஸ்ரயேலரை ஆக்கின தேவன், அவர்களை ஒரு நிழலான ஜனங்களாகவும் பயன்படுத்தினார். தேவன் இஸ்ரயேலருக்கு கானானை கொடுத்து, இப்படியாக எப்படி ஆவிக்குரிய இஸ்ரயேலர் மெய்யான கானானுக்குள் நுழைந்து அதை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதற்கு இன்னொரு நிழலை ஏற்படுத்துகிறார். மாம்சம் மற்றும் பிசாசின் வேலைகளை அழிப்பதை விளக்குவதற்காக தேசத்தின் ஜனங்களின் அழிவை ஏற்படுத்துகிறார். அவருடைய ஜனங்கள் தங்களது சொந்த மாம்சத்திலே ஊடுருவியுள்ள தீய போக்குகளை ஜெயங்கொள்ளவும் நல்ல போராட்டத்தை போராடவும் இதை அவர்கள் தங்களில் நிறைவேற்றவும் வேண்டும்.

### கானானியர்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை

தேவன் எதிர்கால ஜீவனை யாருக்கும் கொடுக்கும்படி நீதியினால் கட்டுப்படுத்தப்படாதிருந்தும் கூட அவர் அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்காகவே, இஸ்ரலேயரும், கானானியரும் உள்ளடக்கிய முழு உலகத்தின் பாவத்திற்கும் கிறிஸ்து முன்னமே மரித்திருக்கிறார். இந்த இரட்சிப்பின் திட்டத்தை ஒதுக்கி வைத்து விட்டு, முழு இனமும் மரண தண்டனையின் கீழ் அழிந்து போயிருக்கும். எனினும் தேவனுடைய கிருபையினால் நாம் அழியாமல் மரண தண்டனையிலிருந்து மீட்கப்படுவோம். ஆகையால் நாம் வாசிக்கிறதாவது: “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” (யோவான் 3:16)

ஒரே மனிதனின் மீறுதலினாலே முழு உலகமும் மரண நிலைமைக்குள் வந்தது போல, ஒரே மனுஷனுடைய கீழ்ப்படிதலினாலே மரண நிலைமையிலிருந்து மீட்கப்படுவார்கள். இந்த ஒருவர் “எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே;” “ஒரே மனுஷனாலே மரணம் உண்டானது போல, ஒரே மனுஷனாலே மரித்தோரின் உயிர்தெழுதலும் உண்டாயிற்று.” “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்பிக்கப்படுவார்கள்.” சபையானது முதற்பலன்களாக இருக்கும். (1கொரிந்தியர் 15:21,22; வெளிப்படுத்தல் 20:6)

ஒரு வார்த்தையில், தேவனுடைய திட்டம், மேசியாவின் ராஜ்யம், அதன் அங்கங்கள், சபையாக, மணவாட்டியாக இப்பொழுது உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆயிரம் வருடம் மீட்பருடன் சேர்ந்து உலகத்தின் சகல ஜாதிகளையும் பாவம் அழிவு, மரணம் மற்றும் கல்லறையிலிருந்து மீட்டு, ஆசீர்வதித்து உயர்த்தி, இழந்ததை திரும்ப கொடுப்பார்கள்.

சோதோமியர்கள் இந்த வகுப்பாராயிருந்து உயிர்த்தெழுதலின் மூலமாக சீர்படுத்தப்படுவார்கள் என்று இயேசு விளக்குகிறார். அதே போல அந்த கானானியர்களும் திரும்பகொடுத்தலுக்குக் கீழாக வருவார்கள். (எசேக்கியல் 16:55; மாற்கு 6:11; அப்போஸ்தலர் 3:19-21)

## செவிடனின் செவிகள் திறவுண்டுபோம்

கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதின் மூலமே யாரும் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவார்கள். ஆனால் மெய்யான ஒளியாகிய இயேசு, "உலகத்தில் வந்த எந்த மனுஷனையும்" பிரகாசிப்பிப்பார் என்பது தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது. கானானியர்கள், சோதோமியர்கள் மற்றும் இயேசுவின் நாட்களுக்கு முன் வாழ்ந்த சகல ஜனங்களும், தேவனுடைய கிருபையின் சத்தியத்தை மற்றவர்களும் சமமாக கேட்கிற சந்தர்ப்பத்தை, இயேசுவை இரட்சகராக நம்பி அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிற சந்தர்ப்பத்தை பெற வேண்டும்.

நமது காலத்தின் சகல புறஜாதிகளுக்கும் இயேசுவின் நாளிலிருந்து இன்றைய வரைக்கும் இருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கும் இதே காரியம் பொருந்தும். தேவனுடைய அன்பின் செய்தியை புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் முடியாதபடி, தப்பறையின் போதகத்தின் மூலம் சாத்தானால் கண்களும் காதுகளும் செயல்படாதபடி நிறுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்தவ தேசங்களில் வாழ்ந்திருக்கிற மகா திரளான புறஜாதிகளுக்கும் இதே காரியம் பொருந்தும். குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம் என்றும் தேவனுடைய மகிமையின் அறிவினால் பூமி நிறைந்திருக்கும் என்றும் வேதவாக்கியங்கள் உறுதியளிக்கின்றன.

இயேசுவின் தலைமையின் கீழ் சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக இருக்கிறது. இவர்கள் மூலமாக மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஆயிரம் வருடங்களாக ஒவ்வொரு ஜாதிக்கும் ஜனங்களுக்கும் கோத்திரத்திற்கும் பாஷைக்காரருக்கும் வரும். (கலாத்தியர் 3:29)

சகல ஜனங்களும் ஆதாமின் மரண தண்டனையிலிருந்து மீட்கப்பட வேண்டும். இரட்சகரைப் பற்றி அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முழு சந்தர்ப்பத்தை சகலரும் பெற வேண்டும். அறிவுடன் பொறுப்பும் வரும். தேவனுடைய கிருபையை வேண்டுமென்றே, தெரிந்தே மறுதலித்து நீதிக்கு பதிலாக பாவத்தை தேர்வு செய்கிறவர்கள் துஷ்டமான பாவியாக கருதப்பட்டு, நித்திய ஜீவனுக்கும் தேவனுடைய எந்த விதமான கிருபைக்கும் அபாத்திரராவார்கள். இப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அதிலிருந்து அவர்களுக்கு மீட்பு கிடையாது. ஏனெனில் கிறிஸ்து இனி மரிக்க மாட்டார். ஆகையால் இனி அழிவிலிருந்து உயிர்த்தெழுதல் இருக்காது. அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். பரிசுத்த பேதுரு அறிவிப்பது போல, அவர்கள் மிருக ஜீவன்களைப் போல கெட்டழிந்து போவார்கள். (2 பேதுரு 2:12 )

தேவனைப் பற்றிய ஒரு தெளிவான அறிவுக்கு வந்து, வேண்டுமென்றே தெரிந்தே பாவத்தை தெரிந்து கொண்டவர்களுக்கு தற்கால வாழ்வின் முடிவில் எந்த நம்பிக்கையையும் கொடுக்காது. மீறுதல் பண்ணுகிற மற்றவர்கள் நீதியான தண்டனையை பெறுவார்கள் என்று வேதம் உறுதியளிக்கிறது. விதைக்கிறவன் எவனோ அவன் அறுக்கவும் செய்வான். தேவன் மற்றும் வேதாகமத்தினின்று விரட்டுகிற நித்திய ஆக்கினை என்கிற பயங்கரமான போதனை, வேதகாமத்தின் போதனை அல்ல. ஆனால் இது பிசாசுகளின் போதனைகள் என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். (1 தீமோத்தேயு 4:1)

"நீண்டகாலமாக மறைக்கப்பட்டிருந்த அதிசயமான இரகசியம்

நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மகிமையின் கதையை பிரகடனப்படுத்து -

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்."

உலகின் புண்ணுக்கு தேவை கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே

கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாகிய

உங்களுக்குள் இருக்கிறார்

இதை பெறமுடியுமா? பிறகு நீங்கள் இருக்கிறீர்கள்

உண்மையில் கிறிஸ்துவின் ஒரு பகுதியாக."

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**